ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] இரக்தாக்ஷி ஆண்டு மாசித்திங்கள் 10-3-85 [இதழ் 4

பங்குனி உத்திரத்திருநாள் 4—4—1985 வியாழக்கிழமை

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி காட்சியருளுகிறார்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஒருத்தனை யெண்ணில்
உயிர்க்குயி
ரானை உணர்வுக்கெட்டாக்
கருத்தனை ஞானப் பிரகா
சனைக்கம லாலயனை
திருத்தனை யன்பர் நினைத்ததெல்
லாந்தரும் நித்தனைச்சற்
குருத்தனை யீசன்என் றெண்ணார்
நரகிற் குடிமக்களே.

— ஞானப்பிரகாசமாலை 6

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10-3-85 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	அறமும் உழவும் வாழ வழி ...	189
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	194
3	மாண்புமிகு க. ராசாராம் அவர்கள் வழங்கிய பேருரை ...	200
4	கடுக்காய் ...	i
5	பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை ...	205
6	அபிராமி அந்தாதி ...	214
7	திருவருட்பாத்திரட்டு ...	219
8	திருத்தலங்களின் சிறப்பு ...	223
9	அன்பகம் ஓர் அறிமுகம் ...	226
10	கதிரவன் குடும்பம் ...	229
11	பெருமிழலைக்குறும்பர், பேயார் ...	231
12	செய்திகள் ...	238
13	எதிர்காலம் ...	241
14	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 2 ...	245

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ.	12
ஆண்டுச் சந்தா சிலோன்	25
ஆண்டுச் சந்தா வெளிநாடு	35
ஆயுள் சந்தா உள்நாடு ரூ	125
ஆயுள் சந்தா வெளிநாடு	350

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 44 | இரக்தாக்ஷி – மாசி – 10–3–85 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

அறமும் உழவும் வாழ வழி

ஒரு தலைமை அவசியம் :

எத்துறையிலாயினும் மக்கள் ஒருமனதாக ஒரு தலைமையில் இயங்கவேண்டும். அப்படி இயங்காத நிலையில் நாடும் வீடும் அவலத்திற்குத் தான் ஆளாக வேண்டிவரும். எல்லோரும் தலைமைப்பொறுப்பை ஏற்க இயலாது. ஒப்பற்றதொரு தலைமையைத் தேர்ந்தெடுத்து அத்தலைமையின் கீழ் ஒற்றுமையாக இயங்கிப் பின்பற்றவில்லை என்றுல் பிற்போக்குத்தான் ஏற்படுமே அன்றி முற்போக்கை நோக்கி முன்னேற முடியாது' ஒரு தலைமையைப் பின்பற்ருதவர் தான்தோன்றித் தனமாகக் கட்டுப்பாடு இல்லாத முறையில் தட்டுப்பட்டுத் தடுமாற வேண்டிய நிலைதான் ஏற்படும். இதை எண்ணித்தான் மணி வாசகப் பெருந்தகையும் " ஆள்வாரிலி மாடு ஆவேனோ? "

என்றுதலைமையைப் போற்றிப்பின்பற்றுமையால் ஏற்படும் தடு மாற்ற நிலையைப் பேசுகிறார். ஒரு மாடுதான் என்றாலும் அதைக் கண்காணித்து வழிநடத்திப்பாதுகாத்து வாழ்விக்க ஒருமனிதன் வேண்டும். அப்படி ஒருவர் இல்லாதநிலை அவலநிலை – கட்டுப் பாடு அற்றநிலை. இந்நிலையில் மாடு என்றாலும் கூடக் கேடு விளையும் என்றால் மனிதனுக்கு ஒரு தலைமை அவசியம் என்பதை இயம்பவும் வேண்டுமோ!

சித்தியார் போதிக்கும் சித்தாந்தம் :

மேற்கூறிய கருத்தையே சிவஞான சித்தியாரில் அருள்நந்தி சிவம் தத்துவ நோக்கில் தலைமையின்பால் கொள்ளவேண்டிய பக்திப்பண்பாட்டைத் தெள்ளத் தெளிய விளக்குகிறார். "ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார் எவ்வுயிர்க் கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்" என்பது அருள்நந்தி சிவத்தின் அருள்வாக்கு. இதில், ஈசனுக்கு அன்பில்லாதவர் அவன்அருள் வழிப்பட்ட அடியவர்களிடத்தும் அன்பில்லாதவ ராகின்றார். அடியவர்களிடத்தில் அன்பில்லாததால் மற்றைய உயிர்களிடத்தும் அன்பில்லாதவர் ஆகின்றார். எனவே தம் மிடத்தும் அன்பில்லாதவர் ஆகின்றார். ஆகவே தம்மைத்தாமே அழித்துக்கொண்டவர் ஆகின்றார். இத்தனையிடங்களிலும் அன்பு உடையவராய், கடமைபுரிபவராய் வாழ்வாரானால் தாமும் வாழ்ந்து, சமுதாயமும் வாழ்ந்து நாடும் வாழத் துணை செய்த வராவார்.

விவசாய வட்டாரத்தின் நிலை :

இந்நிலைதான் இன்று விவசாய வட்டாரத்தில் காணப் படுகிறது. அரசு கொடுத்த சலுகைகள் போதும் போதும் என்றாகிவிட்டது. அறநிலையங்களுக்கு உரிய நிலங்கள் தரும காரியங்களுக்கெனப் பல திறப்பட்டவர்களால் தருமமாக வழங்கப்பெற்ற நிலங்கள் ஆகும். இந்நிலங்கள் மூலம் வர வேண்டிய வருவாய் நிலையை எண்ணிப்பார்த்தால் அவல நிலைதான் மிஞ்சுகிறது, இதயம் வேதனைப்படுகிறது. திருக் கோயில், திருமடங்கள், அறநிலையங்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளோர் அந்நிலங்களின் குத்தகையைச் சரிவரக்கொடுப்பதில்லை. பல ஆண்டுகளாக அவர்கள் கொடுக் காததால் ஆண்டுக்காண்டு விளைவும் குறைகிறது, மழை பெய்யாமலோ அதிக மழை பெய்தோ விளைவு கெடுகிறது. இந்த ஆண்டில் மனிதருக்கு வரும் மஞ்சள் நோயும் பயிரைப் பீடித்துவிட்டது – இந்நிலை எதனைக்காட்டுகிறது? சலுகை

காட்டி தன்னைவளர்த்து வரும் அரசையும் மதிக்கவில்லை. நிலத்தைக் கொடுத்துப் பிழைக்கும் வழிகாட்டிய அறநிலையங்களையும் மதிக்கவில்லை. உணவிற்கு விவசாயிகளையே நம்பி இருக்கும் சமுதாயத்தையும் மதிக்கவில்லை. இவ்வளவையும் மதிக்காமையால் தன்னையும் மதிக்காதவராகி விடுகிறார். இக்குத்தகைக்காரர் இத்தனைபேருக்கும் கேடு சூழ்ந்தவராகி விடுகிறார். அரசு வழங்கும் சலுகைகள் எல்லாம், விழலுக்கு இறைத்த நீராகி வீணாகிறது. எனவே சலுகை என்பது தேச பக்தி, அரசபக்தி, சமுதாய பக்தியுடைய தரம் உடையவருக்கு ஆற்றினால் அன்றோ அனைவருக்கும் பயன்தரும்?

பொது தருமச்சட்டம் :

இந்து அறநிலையச் சொத்துக்களின் வருவாயைப் பெருக்கி வகைப்படுத்துவதற்கு வந்ததே இந்து அறநிலையச் சட்டம். பொது தருமச் சட்டம் (Public Trust Act) என்பது இந்து அறநிலையச்சொத்துக்களை-மொத்தக் குத்தகைக்கு விடப்பட்டிருந்த சொத்துக்களை, ஏழைகளும் வாழ, அறநிலையங்களும் செழிக்க வழிவகுத்திருப்பதே ஆகும். இந்தப் பொது தருமச்சட்டத்தில் அறநிலையங்களுக்குப் பாதகம் ஏற்படாமலும், சாகுபடிதாரர்களுக்குப் பாதகம் ஏற்படாமலும் வழி வகைகள் செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால் அரசு அதனைச் சரியாக அமுல்படுத்தாமையினால் வந்த விளைவே இன்றைய அவல நிலைக்குத் தலையாய காரணமாகும்.

அதனைக் கண்ணோட்டமின்றிச் சரியான நிலையில் அமுல் படுத்தினால் அறநிலையங்களுக்குக்கிடைக்கவேண்டிய வருவாய் கிடைத்துவிடும். விவசாயிகளும் பொறுப்புணர்வுடன் கடமை வழி நின்று பாடுபட்டு விளைவைப் பெருக்கி அவர்களும் வளமுற்று வாழ்வர். அமுல்படுத்தாமையால் விவசாயிகள் தாமும் வாழாமல் அறநிலையங்களையும் வளர விடாமல் நாட்டு முன்னேற்றத்திற்குத் தடங்கலாய் இருந்து வருகின்றனர்.

விதி விலக்கு :

முன்னைய அரசு அறநிலையங்களுக்குச் சொந்தமான கடைகள், கட்டிடங்களுக்கு விதிவிலக்கு அளித்ததுபோல் இன்றைய அரசு அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு மாரட்டோரியம் முதலான சட்டங்களிலிருந்து விதிவிலக்கு அளித்துக் காக்க வேணுமாய் விரும்பிக்கோருகிறது ஞானசம்பந்தம்.

மேலும் அறநிலையங்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளோர் எந்த நிலையிலும் அந்நிலங்களையோ அந்நிலங்களின் சாகுபடி உரிமையையோ பிறருக்கு மாற்றம் செய்யும் உரிமையை உடனடியாகத் தடுத்து நிறுத்தல் வேண்டும். மாற்றம் செய்யச் சட்டத்தில் இதற்கு இடம் இல்லையானாலும் நடைமுறையில் மாற்றங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. பொது தருமச்சட்டம் வந்தபோது யார்யாரிடம் நிலம் ஐந்துஏக்கர்வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டதோ அவரவர்களிடம் பெரும்பாலும் இப்போது நிலம் இல்லை. பல கைகளுக்கு மாறி இருக்கிறது. இது வசூல் செய்வதிலும், ஆட்சி புரிவதிலும் பேரிடர்ப்பாடாக இருந்து வருகிறது. இப்படியே சிறிது காலம்சென்ருல் யாரிடம் நிலம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதே பெரும்பாடாகி விடும். இந்நிலைமாற சட்டத்தில் மாற்றம் தேவைப்படுகிறது.

வேண்டுகோள் :

உயர்ந்தோர் தாழ்ந்திருப்போரை உயர்த்த உதவி செய்ய வேண்டும். இதுதான் இயற்கை நியதி ஆயினும் உதவிச் சலுகையைச் சரியாகப் பயன்படுத்துவோர்க்கே சலுகையைக்காட்டுதல் வேண்டும். அந்தந்த வருடக்குத்தகையை-அந்த அந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோசெலுத்தி விடவேண்டும். அல்லது பொதுதருமச்சட்டத்தில் கண்டுள்ள குத்தகை ஒப்பந்தபடி அளந்துவிட வேண்டும். இயலாது என்று தோன்றினல் அறநிலைய நில உரிமையாளரிடம் எழுத்து மூலம் அறிவித்து 60—40 விகிதமோ அல்லது 75—25 விகிதமோ களத்து மேட்டிலேயே அளந்து விடவேண்டும். இது பொது தருமச்சட்டம், இச்சட்டத்தை இயற்றிய அரசு இதனைச்சரியாக அமுல் நடத்தினல் அறநிலையங்களும் செழிப்புறும், குத்தகை விவசாயிகளும் வளமுறுவர். இதனை அரசு செய்யாமையால் விவசாயிகள் பல ஆண்டுகளாக விளைவில்லை விளைவில்லை என்றுசொல்லி ஈசனுக்கும் அன்பில்லை, அடியவர்க்கும் அன்பில்லை, எவ்வுயிர்க்கும் அன்பில்லை, தமக்கும் அன்பில்லை என்ற சித்தாந்தத்தை நிருபித்து வருகின்றனர். சலுகையோடு நெடுநாளாகச் சாகுபடி செய்துவரும் இவர்கள்தான் ஏழைகள் என்பதில்லை. இவர்களினும் ஏழைகள் கிராமப்பகுதிகளில் அதிகம்பேர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சாகுபடிச் சலுகைகளை நெடுங்காலமாக அனுபவித்து வரும் இவர்களிடமுள்ள நிலங்கள் இத்தகைய மற்றஏழை எளியவர்களிடம் மாற்றப்படும்என்ற அச்சம் இவர்களுக்கு இருந்தால் நல்உணர்வு ஏற்படும். இவர்களும் உழவுசெய்து, பாடுபட்டு வருவாய்பெருக்கி, தமக்குரியபங்கைப் பெற்று, அறநிலையங்களுக்குரிய பங்கைக்கொடுத்து அவர்களும் வாழ்வர். அறநிலையங்களும் வளரும்.

இங்கு ஓரளவு விவரித்துள்ள விஷயங்களை அரசு சிந்தித்துச் செயல்படுத்துமானால் வையகம் துயர்தீர்ந்து வாழ்வாங்கு வாழும். திரைப்படத் துறையிலும், ஆட்சித்துறையிலும், வாழ்வியற்றுறையிலும் புரட்சிகண்டுள்ள முதல்வர் அறநிலையத்துறையிலும் செய்யவேண்டிய இப்புரட்சியைச்செய்து கோயில்களையும், குடிமக்களையும் வளர்த்து வாழ்விக்க ஞானசம்பந்தம் அன்புடன் வேண்டுகோள் விடுக்கிறது.

வாழ்க உழவர்கள் !

வளர்க அறநிலையங்கள் !

ஓங்குக அரசு !

உலகத்திலுள்ள நாம் எல்லோரும் ஒன்றுபட்டு வாழப் பிறந்திருக்கிறோம் – உடலிலுள்ள கைகளும் கால்களும், கண்ணிதழ்களும், மேல்வரிசைக் கீழ்வரிசைப் பற்களும்போல, நாமும்ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இக்கடமையை மறந்து ஒருவருக்கொருவர் மாறாக வேலை செய்வது இயற்கை அமைப்பிற்கு முரணாகும். வெளியே காட்டாமல் ஒருவர்மீது உள்ளத்தில் கோபமாவது வெறுப்பாவது கொள்வதும் முரண்படுவதே ஆகும்.

— ரோமானிய சக்கரவர்த்தி
மார்க்கஸ் அரேலியஸ்
(கி. பி. 111 – 180)

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருப்பறியலூர் திருக்கோயிலில் வழிபாடாற்றி

அங்குச் சிறப்புமுகாம் அமைத்திருந்த

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

நாட்டு நலப் பணித் திட்டக் குழுவின் விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

8—1—1985

வளமும் நலமும் :

ஒரு நாடு என்பது வளமுடையதாகவும் இருக்கவேண்டும்—அத்துடன் நலமுடையதாகவும் இருக்க வேண்டும். வளம் மட்டும் இருந்தால் அது நலமும் உடைய நாடாக இருக்கு மெனச் சொல்ல இயலாது. ஒரு நாட்டில் வளமும் நலமும் திகழ வேண்டுமானல் அந்நாட்டு மக்கள் உழைப்பு மிக்கவர்களாக வும், பணிபுரியும் பண்பு மிக்கவர்களாகவும் திகழவேண்டும், இவ்விரு நிலையும் நாட்டிற்கு வாய்க்குமானல் அது பொன் மலர் மணமும் பெற்றுத் திகழ்வது போலாகும். நமது நாட்டைப் பொறுத்த வரையில் வளத்தில் குறைசொல்ல இயலாது. நலத் தில்தான் குறைசொல்ல வேண்டிவருகிறது. நமது நாட்டு மக்களின் உழைப்புப் பெருகுமானல் அக்குறை அகன்று நலம் பெருகும் என்பதில் ஐயமில்லை. இந்த உணர்வினை இளைஞர் களின் உள்ளத்தில் உண்டு பண்ணவும் அதனைச் செயல்படுத் தவும்தான் நாட்டு நலப்பணித்திட்டம் (N S S) மாணவர்களி டையே அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. செயல்படுத்துவதில் தான் நம்முடைய நலம் இருக்கிறது.

உழைப்பின் உயர்வு :

நம்முடைய நாட்டைப்பொறுத்தவரையில் திட்டங்கள் எல் லாம் நல்லமுறையில் தான் அமைந்திருக்கின்றன. ஆனல் எத் திட்டமும நல்லமுறையில் பெரும்பாலும்செயல்படுத்தப்பட்டுள் ளதாகச் சொல்லஇயலாது. காரணம், மக்களிடையேமா பெரும்

திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. அங்ஙனம் செயல்படுத்த முடியாமைக்கு என்ன காரணம்? அதற்குக் காரணம் ஜனநாயக அமைப்பு முறையேயாகும். ஜனநாயகம் என்பது ஜனங்களை மதிப்பது என்பதுதானேஒழிய, ஜனங்கள் உழைக்காமல் சும்மா இருப்பதல்ல. உழைப்பின் உயர்வை ஒவ்வொரு குடிமகனும் உணரவேண்டும். உணர்ந்து உழைக்கவேண்டும்—செயல்பட வேண்டும். சிறப்புற வேண்டும். ஜப்பான் தேச மக்கள் உழைக்கிருர்கள், உயர்கிருர்கள். ஒரு நாடு 50 லக்ஷம் செலவில் செய்யும் இயந்திரங்களை ஜப்பான் 28 லக்ஷத்தில் செய்துவிடுகிறது. இதற்குக்காரணம் "காலம்பொன்போன்றது" "கடமை கண் போன்றது" என்பதை அந்நாட்டினர் செயல்படுத்திச் சிறக்கின்றனர் என்பது தான்,

காட்டியும் காணவில்லை :

நாட்டுநலப் பணித்திட்டத்தின் கீழ், சாலை போடுதல், குளங்களில் தூறு எடுத்தல், பாலம் அமைத்தல்-இம்மாதிரியான பணிகளை மாணவர்கள் மேற்கொள்ள அரசு திட்டம் செய்திருக்கிறது. இத்தகைய பணிகள் சில இடங்களில்தான் சிறப்பாக—சரியாக நடைபெற்று வருகின்றன. பல இடங்களில் சரிவர நடப்பது இல்லை. இதில் ஆசிரியர்களும் மாணவர்களும் பொறுப்புணர்ந்து போற்றிச் செயல் புரிந்தால்தான் சரி வர—செம்மையாக நடைபெறும். பொதுவாகப் படித்தவர்கள் உடல் உழைப்புச் செய்வது குறைவானது என்று கருதுகின்றனர். அது சுகாதாரம் ஆகாது. நமது நாட்டின் தேசப்பிதா எனப் போற்றப்பெறும்காந்தி அடிகள் உடல் உழைப்பால் தாமே பல பணிகளைப் புரிந்தார். நமது சமயப் பெருந்தலைவராகிய அப்பர்சுவாமிகள் உழைப்பின் உயர்வுக்குத் தம்மையே உதாரணமாகக் காட்டியுள்ளார். காந்தி அடிகள் கழிப்பறைகளைத் தாமேதுப்புரவுசெய்தார். இராட்டையைமகாத்மாச்சின்னமாகக் கொண்டு நூல் நூற்புப் பணியை மேற்கொண்டிருந்தார்கள். அதேபோல நம் அப்பர் சுவாமிகளும் சமயத்தின் சின்னங்களாகத் திகழ்ந்த திருக்கோயில்களைத் துப்புரவு செய்தார். சீரிய சிறந்த சிவஞானியாக அவர் விளங்கியபோதும் கைச்சின்னமாக உழவாரப் படையைக் கைக்கொண்டார். உழைப்பின் உயர்வினை உலகுக்குப் புலப்படுத்தினர். இதனைக் காந்தி அடிகளும் உயரிய வகையில் உணர்த்தியுள்ளார். அப்படி ஆன்றோர்கள் தாமே செயல்பட்டுச் சிறந்தவகையில் உணர்த்தியும் கூட நம்மில் 25 சதவிகித மக்கள்கூட உடல் உழைப்பின்

உயர்வினை உணரவில்லை. அத்தகைய மனப்பான்மை இன்னும் மக்களுக்கு வரவில்லை என்பது ஒரு குறைபாடாகவே உள்ளது.

எலிஸபெத்ராணியின் எளிமை :

உடல் உழைப்பு உண்மையில் உடல் நலத்திற்குப் பெரிதும் உதவுகிறது. இங்கிலாந்தின் பேரரசி எலிசபெத் மகாராணி ஏற்றதோர் உதாரணமாகத் திகழ்கிறார். ஓர் எழுத்தருக்கு ஏதாவது ஒன்று தெரிவிக்க வேண்டும் என்றால் அவரே நடந்து போய் அவர்பால் நேரில் தெரிவிக்கின்றாராம். ஒரு அழைப்பு மணி அடித்து அவ்வெழுத்தரை வரவழைத்து மகாராணி ஆணையிடலாம். ஆனால் அவர் உடலுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே போலி கௌரவத்தைப் போற்றாமல் தாமே நேரில்சென்று தெரிவித்துவருகிறார். இதனால் ஏற்பட்ட நன்மை என்னஎன்றால், மகாராணிக்கு25-வது வயதில் இருந்த எடையைவிட 59 வது வயதிலும் ஒரே பவுண்டு தான் கூடியிருக்கிறது. அவர் உடலில் இரத்தத்தில் கொழுப்பு சக்தி (Collestral) அதிகரிக்கவில்லை. உடல்ஆரோக்கியம் நல்லமுறையில் உள்ளது. நோய்நொடிகள்கிடையாது. அவரவர் உழைப்பு தான் அவரவர் நலத்தையும் வளர்க்கிறது. நாட்டையும் வளர்க்கிறது. இவைபுறத்தே காணப்படும் பயன்.

உடம்புக்குத் தலைநகர் தலை :

நம்முடைய உடம்பில் அறிவுப்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் தலையில் தான் உள்ளன. உடலுக்கு இயக்குநராகத் (Director) திகழ்கின்ற மூளைப் பகுதியும் தலையில் தான் உள்ளது. எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பது பழமொழி. சிரசே உடம்பின் தலைநகராகத்திகழ்கிறது. இத்தனைச்சிறப்புந்தலைக்கு இருக்கிறது கைகால்கள் ஆகிய தொழிற் கருவிகள் எல்லாம் இருந்தும், ஒரு மூட்டையைச் சுமக்க வேண்டும் என்றால் தலைதான் அதை ஏற்றுச்சுமக்கிறது. இஃது எதனைக்காட்டுகிறது. அறிஞர்களாக உள்ளவர்கள் – அனைவரும் உடல்உழைப்புச்செய்யவேண்டும். அறிஞராயினும் உடலுழைப்பை மேற் கொள்ளவேண்டும் என்பதற்குத் தான் ஆண்டவன் அங்ஙனம் அமைந்துள்ளான். இது அகத்தேகாணப்படும் பயன்.

உழைப்பும் உழைப்பின்மையும் :

மேலும் சிந்தித்தால் ஓரனுபவத்தை இங்கே உரைக்கலாம். உழைப்பிற்கும் உழைப்பின்மைக்கும் அஃதுஎடுத்துக்காட்டாக

அமையும். ஆதித்திராவிடர்கள் நம் நாட்டின் பழைமையான குடிமக்கள். அவர்கள் அனைவருமே கடும்உழைப்பாளிகள். வெயில், குளிர், மழை முதலியனவற்றைப் பொருட்படுத்தாமல் அவர்கள் சேற்றிலும் நீரிலும், காட்டிலும் மேட்டிலும் பணி செய்யக்கூடியவர்கள். உழைப்பின் வரப்பிரசாதமாக அவர்களுக்குத்தலையில் வழுக்கை விழுவதில்லை. காலில் யானைக்கால் நோய் (elephantiasis) வருவதில்லை. விதைவீக்கம் ஏற்படுவதில்லை. ஆதித்திராவிடப் பெண்மணிகட்குப் பால் அதிகம் சுரக்கிறது. சமீபத்தில் ஒரு விவசாயப் பேரறிஞர் இக்கருத்தை வெளியிட்டார். நூற்றுக்கு மேல் இங்கு கூடியுள்ள ஆதித்திராவிடர்களைக் கேட்டபொழுது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டனர். உழைப்பின்மைக்கும் உழைப்புண்மைக்கும் எவ்வளவு வித்தியாசம்இருக்கிறது பாருங்கள்.

நாட்டு நலப்பணித் திட்டம் :

நமது தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி நாட்டு நலப் பணித்திட்டத்தை மேற்கொண்டு சென்ற சில ஆண்டுகளாகச் செயல்பட்டுவருவதைநலம்செய்து,வருவதைப்பாராட்டுகிறோம். காவிரியில் மூங்கில்பாலம் அமைத்தல், திருக்குறுக்கை, திருக்கடவூர் ஆகிய ஊர்களில் சாலை, பாலம் அமைத்தல் முதலிய பணிகளை மேற்கொண்டு செயலாற்றி உள்ளார்கள். பறசலூர் என வழங்கும் இத்தலத்தில் நமது ஆதீனத்திருக்கோயில் திருக்குளத்தில் ஆகாயத்தாமரை என்கின்ற பூண்டுகளை இரண்டு நாட்களாக ஓரளவு அப்புறப்படுத்தித் தூய்மை செய்திருக்கின்றனர். இவ்வூர் மக்களும் இப்பணிக்கு உறுதுணையாக இருந்ததும், உணவு அளித்து உபசரித்ததும், திட்டம் நல்ல முறையில் செயல் படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெளிவு படுத்துகிறது.

பறியலூர் வீரட்டானம் :

திருப்பறியலூர் தலத்தைப்பற்றி இங்கு அறிவித்தல் பொருத்தமுடையதாகும். சிவபெருமான் நல்லவர்களைப் பாதுகாத்து அல்லவர்களை அடக்க வீரத்தைக்காட்டிய இடங்கள் எட்டுஎனப்பேசப்படும், (1) பிரமன் தலையைக்கொய்த இடம் கண்டியூர், (2) அந்தகாசுரனைச் சம்காரம் செய்தது திருக்கோவலூர், (3) திரிபுரசம்காரம் புரிந்தது திருவதிகை, (4) சலந்தராசுரனைச் சம்கரித்த இடம் விற்குடி வீரட்டானம், (5) யானையை உரித்துப்போர்த்திய தலம் வழுவூர் வீரட்டானம், (6) காமதகனம் நிகழ்ந்தது திருக்குறுக்கைவீரட்டானம், (7) காலனைச்

சம்காரம் செய்த தலம் திருக்கடவூர்வீரட்டானம், (8) மாமனுகிய தட்சனைத் தலைகொய்த இடம்தான் இப்பறியலூர் வீரட்டானம்

அட்ட வீரட்டானத்தில் குறுக்கை, பறியலூர், கடவூர் மூன்றும் நமது ஆதீனப் பராமரிப்பில் இருந்துவருகின்றன. ஒவ்வொருதலவரலாற்றையும்நாம்சரியாகச்சிந்தித்துப்பார்த்தால்பல உண்மைகள் நமக்கு நன்கு விளங்கும். இப்போது இப்பறியலூர் வீரட்டானம் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

தட்சன் பிரமதேவனின்புத்திரன். சிவபிரானின் ஒரு பாகத்தில் விளங்கும் உமா தேவியைத் திருமகளாகப் பெறவும், அப்பிராட்டியைச் சிவபெருமான் நாடிவந்து மணம்புரிந்து கொள்ளவும் வரம்பெற்றவன் தக்கன். இருபத்தேழு நட்சத்திரங்களாகிய இவனது புதல்வியரைச்சந்திரன் மணந்தான். சந்திரன் ரோஹினி இடம் மட்டும் அதிக விருப்புள்ளவனுகவும், ஏனைய பெண்களை அலட்சியப் படுத்தியவனுகவும் இருந்த காரணத்தால் தட்சனது சாபத்திற்கு ஆளானுன். நாளுக்கு நாள் உடல் நலத்தைக் குறைக்கக்கூடிய க்ஷயரோகம் பற்றிச் சாகக்கடவாய் எனச் சாபம் இட்டான். சந்திரன், பிரமதேவன், இந்திரன்போன்ற தேவர்களிடம் சென்று முறையிட்டான், இறுதியாகச் சிவபெருமானைச் சரண்புகுந்தான். சிவபெருமான் சந்திரன் செய்தகுற்றத்தையும், தட்சன் செய்த குறையையும் சீர் தூக்கிப் பார்த்துச் செய்த குற்றத்திற்குத் தண்டனையும் குறைக்கு நிறைவும் வழங்கினுன். மற்ற அனைத்து (நட்சத்திரங்கள்) மனைவியருக்கும் திருமாங்கல்ய பிட்சை தந்தருளினுர். இருபாலார்க்கும் நன்மை செய்தார். குற்றத்தை உணர்ந்தமையால் சந்திரன் திரும்பவும் வளர வேண்டும் எனத்தீர்ப்பு வழங்கினுர் சிவபெருமான்.

தட்சன் தானிட்ட சாபத்தை மாற்றியதால் பெருமானிடம் கோபமுற்றுன். தாண்டவ மூர்த்தியாகிய சிவனை நீக்கி ஒரு வேள்வி செய்ய முற்பட்டான். ததீசி முனிவர் போன்றோர் அறிவுரை கூறியும் தட்சன் அலட்சியம் செய்தான். நந்தியெம்பெருமான் நல்லுரை வழங்கியும் தட்சன் செவி சாய்க்கவில்லை. சிவபெருமான் வீரபத்திரரை ஏவினுர். வீரபத்திரர், தட்சன் தலையைக் கொய்து யாககுண்டத்தில் இட்டார். இவ்வூரில் திருப்பறியலூரில் யாகம் நடந்த அடையாளங்கள் சில உள்ளன.

இவ்வரலாற்றுல் அறியப்படுவது எவ்வளவு பெரியவராயினும் ஒருவர் செய்த நன்மையை மனிதன்மறந்து விடுகிருன் என்பதுதான். சிவபெருமானிடம் வரம்பெற்ற தக்ஷன் சிவனை நீக்கி யாகம் செய்யத் தலைப்பட்டான் என்றுல் மனிதனின் மகிமை பற்றி என் சொல்வது.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்ற குறளைப் படிப்பது மட்டும் போதாது, வாழ்வில் மேற்கொள்ளவும் வேண்டும், - கடைப்பிடிக்க வேண்டும். அதுவே நாம் செய்கின்ற முறையான வழிபாடாகும். நன்றிக்கடனாகும்.

இங்கு மூன்று நாட்கள் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்டத்தில் பங்கு கொண்டு பணியாற்றிய பேராசிரியர்கள், மாணக்கர்கள், ஊர்ப்பொது மக்கள் யாவருக்கும் நல்லன எல்லாம் நாளும் பெருகச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வளர்க நாட்டுநலப்பணி ! வாழ்க வையகம் !

டாக்டர் பட்டம்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் கடந்த எட்டு ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து துணைப்பேராசிரியராகப் பணியாற்றிவரும் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம்.ஏ. திருப்பனந்தாள் செந்தமிழ்ச் கல்லூரியில் முறையாக நான்கு ஆண்டுக் காலம் பயின்று வித்துவான் பட்டம் பெற்றவர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் " சமய, மொழி வளர்ச்சியில் காசிமடத்தின் பங்கு " என்னும் தலைப்பில் ஆய்வு செய்து ஆய்வேடு அளித்த வகையில் அப்பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது இவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் டாக்டர் திரு. ச. வே. சுப்பிரமணியம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஆய்வு செய்தார். 1970 முதல் 1976 வரை நாகப்பட்டினம் கனகசபைப் பிள்ளை தமிழ்க் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். 14 ஆண்டுக்கால கல்லூரிஆசிரியப்பணி அனுபவம் பெற்ற இவர், சமய, இலக்கியப் பேச்சாளராகவும் விளங்கி வருகின்றார்.

தருமையாதீனத்தில் நடைபெற்ற
அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கின்போது
சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தைத்
தமிழகச் சட்டசபை சபாநாயகர்
மாண்புமிகு க. ராசாராம் அவர்கள்
தொடங்கிவைத்து ஆற்றிய

பேருரை

(மலர் 44, இதழ் 3, பக்கம் 139 இன் தொடர்ச்சி)

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்று திருவள்ளுவர் பெருமான் திருக்குறளிலும்

ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே

என்று திருஞானசம்பந்தர் பெருமான் தேவாரத்திலும்,

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்றும்
மன்றுளார் அடியார் அவர் வான் புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்

என்றும், சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திலும்,

காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் கொண்டாட்டம்

என்று பாரதியார் தம் கவிதையிலும் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் தமிழர்தம் உலகளாவிய சிந்தனையைத் தெற்றெனப் புலப்படுத்தும்.

சைவ சித்தாந்த சமயமானது, எந்த ஒரு சமயத்தினையும் இகழாமல், ஏற்ற பெற்றி சோபானமுறையில் எல்லாவற்றையும் தழுவிப்போற்றி நிற்கும் தன்மையினை,

முத்தியை முற்றவைத்தார். முறைமுறை நெறிகள்வைத்தார்
என்னும் அப்பர் பெருமான் வாக்கால் அறியலாம். சுந்தர

மூர்த்தி சுவாமிகள் "அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்று குறிப்பிட்டிருப்பது இச்சமயம் உலகமளாவிய செந்நெறி என்பதனை உணர்த்தும்.

சமயங்கள் பல மறுமைப் பயன் மட்டுமே கூறி, இம்மை வாழ்வின் இன்றியமையாமையினைப் புறக்கணிப்பதால் புலப்பட, சைவ சித்தாந்தம் இம்மை வாழ்க்கை நெறிக்கும் பெரிதும் இயைந்து நிற்றலையும், மறுமைப் பயனுக்கு வழிகாட்டுதலையும் ஈண்டுக் குறிப்பிட வேண்டும். இதனையே திருஞானசம்பந்தரும்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

சைவ சித்தாந்தச் சான்றோராம் அருள் நந்திசிவம், சைவ சித்தாந்தம் உலகியலோடு ஒட்டியது எனக் குறிப்பிட்டு, சமய வாழ்வில் தலைப்படவிரும்பும் உலகோர் அனைவரும் பின்வரும் பதினாறு இயல்புகளைக் கொண்டிலங்க வேண்டும் என்று குறிப்பிடுவார்.

1. உயர்ந்தவரோடு பொருந்த நடத்தல்
2. எவரிடத்திலும் அன்பாகப் பழகுதல்
3. எளியவரிடத்தும்,சிற்றுயிர்களிடத்தும்இரக்கம்காட்டல்
4. உலக இயற்கை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல்
5. எவரிடத்தும் இன்முகம் காட்டி, இன்சொற் கூறி நலம் புரிகுதல்.
6. எல்லாரையும் அன்பாற் பிணித்துக் கொள்ளும் அரிய திறத்தராதல்
7. நல்ல பண்புகளின் உறைவிடமாய் அமைதல்
8. ஐம்பொறிகளையடக்கி, நல்லவற்றை நாடிக் கடைப்பிடித்தொழுகுதல்
9. தக்கவர்க்குத் தக்கன தந்து உதவி புரியும் சால்பு
10. அறிவு, வயது, அனுபவம் முதிர்ந்த பெரியோரிடம் பணிந்து நடத்தல்

11. எவரிடத்தும் தம் செருக்கை வெளிப்படுத்திக்கொள்ளாமை; மாறாக நயமாகப் பழகுதல்

12. பிறர் மனை விழையாமை, பிறர் பொருள் விரும்பாமை முதலிய நற்பண்புகளைப் பெற்றுப் பற்றற்றுத்[illegible]கழ்தல்

13. உண்மை கடைப்பிடித்து ஒழுகுதல்

14. மறந்தும் தீ நெறிக்கண் சேராமல், அறநெறிக்கண் சார்ந்து அடங்கி வாழ்தல்

15. தக்கது இது, தகாதது இது என்று பகுத்துணர்ந்து வாழவல்ல திறனுடைமை.

16. சான்றோர்களையும், அவர்தம் கொள்கைகளையும் போற்றித் தழுவி, மக்கள் நலங்கருதிப் பணியாற்றுதல்

இனிப் பழந்தமிழர் இத்தகு சீரிய நெறிகளின் தலையூற்றாய்த் திகழும் மன்னுயிர்க்கு இரங்கிச் சமாதான நோக்கமுடையவராய் வாழ்ந்த திறத்தை ஒரு சிறிது காண்போம்.

சோழன் நலங்கிள்ளி தன் தாயாதியாகிய நெடுங்கிள்ளி வாழ்ந்த உறையூர்க் கோட்டையை முற்றுகையிட்டுத் தகர்க்க நினைத்தபொழுது, சமாதான நாட்டமுடைய கோவூர் கிழார் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியிடத்துச் சென்று பின் வருமாறு கூறலானார்.

"பெரிய பனையினது வெள்ளிய தோட்டைச் சூடினோன் அல்லன்; கரிய கோட்டினையுடைய வேம்பினது தாரை உடையோன் அல்லன்: உன்னுடைய தலைமாலையும் ஆத்திப்பூவாற் செறியக் கட்டப்பட்டது; உன்னோடு போரிடுபவன். தலைமாலையும் கண்ணியும் ஆத்திப்பூவாற் செறியக் கட்டப்பட்டது. ஆதலால், உங்களுள் ஒருவர் தோற்றாலும், தோற்பது உங்கள் சோழர் குடியேயன்றோ? இருவரும் போரில்வெல்லுதல் என்பது இயலாத செயல்; அஃது இயற்கையும் அன்று; ஆதலால் உங்கள் குடிப்பெருமைக்கு மாசுவிளைவிக்கும்செயலைச் செய்யாதொழியுங்கள். மாற்றாரை மனம் பூரிக்கச்செய்யும் இச் சிறு செயலைச் செய்யாதீர்கள். ஆதலால் அருள்கூர்ந்து இச்செயலைக் கைவிடுங்கள்!

இரும்பனை வெண்டோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே.

ஒருவீர் தோற்பினும் தோற்பது உம்குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்
குடிப்பொருள் அன்றுநும்செய்தி; கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யும் இவ் இகலே.

புறநானூற்றின் பக்கங்களை விரிவாகப் புரட்டிப் பார்த்தால் பழந்தமிழர் சமாதான நாட்டமுடையோராய் இருந்த அருட் பண்பு விளங்கும். மலையமான் மக்களை யானைக் காலினின்றும் காப்பாற்றியமை, ஒற்றிவந்தான் என்று கொல்லப்படவிருந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காப்பாற்றியமை, நெடுங் கிள்ளியைக் காப்பாற்றியமை முதலிய செயல்கள் கோவூர்க் கிழாரின் சமாதானப் பண்பை, அருள் நாட்டத்தை உணர்த்தும் தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அதிகமான் அனுப்பிய அந் நாளைய சமாதான வெண்புறு அன்றோ!

இனித் திருமடங்கள் ஆற்ற வேண்டிய பணிகளைக் கூறி என்னுரையை முடிப்பேன்.

திருமடங்கள் அன்றுதொட்டு, சைவசமய வளர்ச்சிக்கும். தமிழ் வளர்ச்சிக்கும் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டுகிறேன், அதிலும் குறிப்பாகத் தருமபுரத்திருமடம் திருக்கோயில்கள் பலவற்றினைச் செம்மையாக நிர்வகித்தும், தமிழ்க் கல்லூரி ஒன்றை நடத்தியும் வருவதனை நானறிவேன்.

எளிய பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் சைவ சமய வரலாறு, சைவ சமயக் கொள்கைகள், சைவ சித்தாந்தக் கருத்துகள், திருக்கோயில்களின் சிறப்பு, சமயம் மக்களின் அன்றுட வாழ்விற் பெற வேண்டிய இடம் முதலியன குறித்து மேலும் மேலும் நூல்கள் எழுதி வெளியிடல் வேண்டும்.

திருக்கோயில்களைக் கண்காணிப்பதுபோன்றே பல சிற்றூர் களிலும் பள்ளிகளையும், பேரூர்களில் கல்லூரிகளையும் நிறுவி மாணக்கர்களுக்குக் கிறித்துவக் கல்வி நிலையங்கள் போன்று, உயர் கல்வியும், ஒழுக்கமும் பெறத் துணை நிற்க வேண்டும்.

சித்த மருத்துவமனைகள் பலவற்றை ஆங்காங்கே திருக் கோயில்களோடு தொடர்புபடுத்தி ஏற்படுத்திக் கிராம மக்கள் பிணியகலப் பாடுபடவேண்டும். சித்த மருத்துவத்திற்குப் பயன்படும் மூலிகைப் பண்ணையினை ஒவ்வொரு திருக்கோயில் தோட்டத்திலோ அல்லது அதனையடுத்தோ உருவாக்க வேண்டும்.

பாதிரிமார்கள் சேரிகளுக்கும் சென்று தாழ்த்தப்பட்ட மக்களை அரவணைத்து ஆறுதல் சொல்லிக் கல்வியும், மருத்துவ வசதியும் ஏற்படுத்தித் தருவதுபோலத் திருமடத்தின் சார்பில் துறவிகளும் (Fathers) இளந்துறவிகளும் (Brothers) சமயப் பணியுடன் சமுதாயப் பணியும் ஆற்ற முன்வரவேண்டும்.

சொல்லாற்றலும், திருமுறைகளின் தோய்வும், சைவ சித்தாந்த சாத்திரங்களில் பயிற்சியும், ஆங்கிலப் புலமையும், ஒழுக்காறும் வாய்ந்த சமயப் பிரசாரகர்கள் சிற்றூர்கள் எங்கணும் சென்று சமயப் பிரசாரம் செய்யவேண்டும்.

வெறும் ஆரவாரத்திற்கும் ஆடம்பரத்திற்கும் செலவிடப் படும் செலவினங்களைத் தவிர்த்து, அப்பணத்தை ஏழை எளியவரின் நல்வாழ்விற்கு உதவலாம்,

" மக்கள் தொண்டே மகேசன் தொண்டு "

" ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் " என்றபடி, இனித் திருமடங்கள் சமுதாயத் தொண்டிற்கு முதன்மைதந்து மக்கள் மனதில் இடம் பெற்றால், தானே சமயம் தழைக்கும் என்பதும், " என்கடன் பணிசெய்து கிடப்பதே " என்று அப்பர் அடிகளின் அருள்வாக்கே, அனைவருடைய வாழ்க்கைக் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

இறுதியாக, சைவ சித்தாந்தத் தத்துவச் சிறப்பினையும், பிற சமயங்களின் தத்துவச் சிறப்பினையும் ஒப்புநோக்கி ஆய்வு செய்து, சைவ சித்தாந்தம் உலகெங்கும் பரவவேண்டும் எனும் பெருநோக்கில் ரூபாய் இருபது லட்சம் செலவில் தொடங்கவிருக்கும் இவ்வாய்வு மையத்தைத் துவக்கிவைத்து, விழாவில் பங்குகொண்ட அனைவருக்கும், மீண்டும் நன்றிகூறி அமைகிறேன்.

வணக்கம் !

யார் எது செய்தாலும, எது சொன்னாலும், நன்றே செய்யக்கடவேன். பொன்னும் மரகதமும் பட்டும் இப்படியே. யார் எது சொன்னாலும் எது செய்தாலும் அவை தம் நிறமோ அழகோ மாறுமா ?

— ரோமானிய சக்கரவர்த்தி
மார்க்கஸ் அரேலியஸ்.

கடுக்காய்

[டாக்டர் திரு. ஆர். தியாகராஜன் எல். ஐ. எம். அவர்கள், சென்னை இறையாட்சி இந்திய மருத் துவக்கல்லூரி, சித்தமருத்துவ உதவிப்பேராசிரிய ராகப் பணியாற்றியவர்கள். அவரது நூலான 'குணபாடம்' (Materia Madica) இரண்டு - மூன்றும் பகுதிகளிலிருந்து "கடுக்காய்" பற்றிய இக்கட்டுரை தொகுக்கப்பட்டது. முதற்பதிப்பு 1952.]

கடுக்காய்க்கு அக்கோடம், அங்கணம், அந்தம், அபரணம் முதலிய 50 பெயர்கள் உண்டு. இதை ஆங்கிலத்தில் Chebulic Myrobalam அல்லது Ink nut எனக் கூறுவர்.

கடுக்காய் மர வகுப்பைச் சார்ந்தது. சில இடங்களில் இது உயரமாகவும் சில இடங்களில் உயரமின்றித் தாழ்ந்தும் பயிரா கிறது. நருமதைக்குத் தென்கரையில் வளரும் மரங்கள் சற்றேறக் குறைய 100 அடி உயரம் வரை வளர்கின்றன.

கடுக்காயில் ஏழு வகை உண்டு – விசயன் எனும் வகை யைச் சேர்ந்த கடுக்காய் வாத நோயைத் தீர்க்கும். அரோகிணி, சீதசம்பந்தப்பட்ட நோய்களைத் தீர்க்கும். பிருதிவி, அழற்சி யைப் போக்கி உயிரைக்காக்கும். அமிர்தக்கடுக்காய், ஐயத் தைப் போக்கிக் கழிச்சலை மிகவுண்டாக்கும். சிவந்தி, மூலநோ யைப் போக்கவல்லது. திருவிருத்தி அல்லது மொந்தன் கடுக் காய் புண்ணை ஆற்றவல்லது. அபயன் கடுக்காய் அங்க நோய் களைப் போக்கும் – கோழையை அகற்றும். மலக்கட்டை நீக்கும், இதைப்பற்றிய பாடல்,

அபயன் எனும் கடுக்காய் அங்கநோ யெல்லாம்
அபயமிட்டோட அடிக்கும் — அபயற்(கு)
அதிக நிறம்கறுப்ப தாகும்விளை பூமி
பொதிக மலையாம் புகல்.

இவ்வேழுவகைக் கடுக்காய் அன்றி வேறு நான்குவகையும் உண்டு. கருங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால் கடுக்காய் ஆகியவையாகும். கருங்கடுக்காய் பழைய மலத்தை

இளக்கி வெளியேற்றும். செங்கடுக்காய் உடலைப் பொன்னிறம் தந்து ஒளிரச்செய்யும். புத்தியைக் கூர்மை ஆக்கும். வரிக்கடுக்காயும் தேகத்துக்கு அழகுதரும். திரிதோடத்தைப் போக்கும். பால்கடுக்காய் உடலுக்குப் பொலிவையும், ஒளியையும் வன்மையையும் தரும். வயிற்று மந்தத்தைத் தீர்க்கும்.

ஆமம் கெடும்காண் அழகும் பொலிவுமிகும்
சேமம் பெறுபலமும் சேரும் — தாமநெடும்
வேற்கடைக்கண் கும்பமுலை மெல்லியலே எப்போதும்
பாற் கடுக்காய் உண்பவரைக் காண். (அ கு.)

பொதுவாகக் கடுக்காயின் குணம்: இது வெம்மை, நொய்மை, வறட்சி, இயக்கம் என்னும் நான்கு பண்புகளை உடையது இது பசித் தீயைத் தூண்டி, செரிப்பிக்கச் செய்யும். உடற்கட்டுகளுக்கு வன்மைதரும். முதுமை வரவொட்டாமல் காக்கும். அன்றி, வாழ்நாள் நீட்சியை உண்டாக்கும். அறிவையும் ஆற்றலையும் அளிக்கும். இவ்வகைச் சிறப்பால் இஃதொரு காயகற்பப் பொருளாகக் கருதப்படுகிறது.

— தொகுத்தளித்தவர்
"செந்தில் குமரன்"

தருமையாதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காபரமேசுவரி ஆலய மகாமண்டபத் திருப்பணிக்குக் காணிக்கை செலுத்தியவர்கள் விபரம்

10—7—84 இதழில் வெளியிடப்பட்டது முடிய	ரூ.	40,177—00
241	V. இராமசாமி நாயனர், மயிலாடுதுறை	51—00
242	காந்தாமணி ரவிச்சந்திரன், சென்னை	101—00
243	சுமித்திரா நெடுமாறன், சென்னை	101—00
244	நிரஞ்சன பூபதி, சென்னை	101—00
245	M. செல்லத்துரை, புஷ்ப வியாபாரம், மயிலாடுதுறை	51—00
246	V. இராமசாமி பிள்ளை, காட்டுமன்னார்குடி	51—00
247	சி. இராமமூர்த்திஐயர், வைத்தீச்வரன்கோயில்	151—00
	ஆகக் கூடுதல் ரூ.	40,784—00

அனைத்துலகச்

சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

சிறப்புச் சொற்பொழிவுகள் :

மேலை நாடுகளில் தற்போது மேற்கொள்ளப்பெறும் ஆய்வு அணுகுமுறைகளும் அவற்றின் வரலாற்று வளர்ச்சிகளும் குறித்துத் தொடர் சொற்பொழிவுகள் அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சிநிறுவனத்தின் சார்பில் 23, 24—2—85 ஆகிய இருதினங்களில் நிகழ்த்துவிக்கப் பெற்றன. முதற்கட்டமாகக் கனடா நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சி அறிஞர் திருமதி. கொப்பெட்ராயர் இருதினங்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். மயிலாடுதுறை மகாதானத் தெருவிலுள்ள ஸ்ரீ குருஞான சம்பந்தர் மிஷன் கட்டடத்தில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் டாக்டர் திரு. ஏ. வி. ஜயச்சந்திரன் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்ச்சிகளைச் செம்மையான முறையில் நிகழ்த்தி வைத்து வரவேற்புரை நன்றியுரைகளைக் கூறினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர், மெட்ரிக்குலேஷன் பள்ளிக் கட்டிடத்தில் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியும் அறிஞர்கள் வருகைபுரிந்து சிறப்பித்தமைக்கு மிஷன் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அண்ணமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி அறிஞர்களும், ஆராய்ச்சி மாணவர்களும், கல்லூரிகளில் பணியாற்றும் தமிழ்' ஆங்கிலம், தத்துவம், வரலாறு, மொழியியல், பொருளியல் துறைப்பேராசிரியர்களும், பல்துறை ஆய்வு மாணவர்களும் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

குருமணியின் அருள்மொழி

பழமையும் புதுமையும்

இறைவன் உயிர்களுக்குப் புதுமையால் பொலிவைக் காட்டி, பழமையால் வளமைகாட்டி வாழ்விக்கின்ருன் ; மக்கட்கு உணர்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்து ஊக்கப்படுத்துவது புதுமை. இவற்றைச் சரிவரப் புரிந்து கொண்டு வாழ்க்கையில் உயிர்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதே திருவுள்ளம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

அனைத்துலகச்

சைவ சித்தாந்த பண்பாட்டு ஆய்வுக் கழகம்

நிலைநிதி வழங்கியவர்கள் விபரம்

10—9—84	இதழில் வெளியிடப்பட்டது முடிய ரூ.	23,352—00
26.	S. ஆறுமுக தேசிகர், சென்னை-15 ரூ.	251—00
27.	K. வானமாமலையாதவ் B. E., A. M. I. E மதுரை-1	1001—00
28.	M. மஞ்சுளா, கூறைநாடு, மயிலாடுதுறை.	1001—00
29.	S. ரமேஷ், மயிலாடுதுறை.	1000—00
30.	S. குருமூர்த்தி, வைத்தீஸ்வரன் கோயில்	1000—00
31.	எஸ். சேதுராமன், திருப்பனந்தாள்	1000—00
32.	K. கரும்பாயிரம், நெடுங்காடு கம்யூன்	1000—00
33.	R. S. வீரராகவன், மயிலாடுதுறை	1000—00
34.	ஏ. இராதாகிருஷ்ணன், திருச்சி-1	5000—00
35.	ஏ. துரைராஜ், திருச்சி-1	3000—00
36.	B. வீரமுத்து, திருச்சி-1	2000—00
	ஆகக் கூடுதல் ரூ.	40,605—00

குறிப்பு :- இந்தப் பெரும்பணிக்கு நன்கொடை வழங்கும் தொகைக்கு வருமான வரி விலக்கு (Incometax exemption) உண்டு. The Commissioner Of Incometax, Madras 600 034 Order No 2039 (4)/84 of 9—4—84.

குருமணியின் அருள்மொழி

அறங்கள் மூன்று

கடவுள் தொண்டைப் 'பதியறம்' எனவும், உயிர்களுக்குச் செய்யும் தொண்டைப் 'பசு அறம்' எனவும், தங்கள் உற்றார் உறவினர்களைப் பேணுதலைப் 'பாச அறம்' எனவும் கூறலாம்.

பெரியபுராணம்
பன்னிரண்டாம் திருமுறை

குடந்தை திரு. N. சேதுராமன் B. SC., D. M. I. T,
Director, Raman & Raman Private Limited

(மலர் 44, இதழ் 3, பக்கம் 164 இன் தொடர்ச்சி)

கல்வெட்டுச்செய்திகள் :

திருநாகேஸ்வரம் கல்வெட்டுக்கள், பெரியபுராணம் இவைகளினல் உமாபதிசிவம் கூறும் சோழமன்னன் இரண்டாம் குலோத்துங்கனே என்பதை எளிதில் அறியலாம். பெரியபுராண விரிவுரை கேட்டபிறகு மன்னனின் மனம் மாறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனரின் விரிவுரையே நம்பியாண்டார் நம்பியின் அந்தாதி ஆகும். இரண்டின்விரிவே பெரியபுராணம் ஆகும் 10. சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்த எடுப்பிலேயே திருவாரூர் நகர்ச்சிறப்பையும், சுந்தரரைச்சிவபெருமான் ஆட்கொண்டதையும் விளக்குகிருர். இவைகளையெல்லாம் கேட்ட மன்னனும் மனம் மகிழ்ந்தான். திருவாரூர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனர்க்கும் பரவை நாச்சியாருக்கும் – தனது ஏழாவது ஆட்சி ஆண்டில் சிலைகளை எழுந்தருள்வித்தான். தன் பெயரால் அநபாய சோழ நல்லூர் என்னும் புதிய ஊரை நிர்மாணித்து அதனைச் சுந்தரர், பரவை நாச்சியார் பூசை வழிபாடுகளுக்கு நிவந்தமாக அளித்தான். திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் திருமேனிகள் எடுப்பித்தான். மூவர் முதலிகளுக்கு ஆண்டுதோறும் 62–நாட்கள் திருவிழாஎடுக்க உத்தரவிட்டான். இவ்விழாக்களை எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதை விரிவாய் விளக்கினன். அநபாயனகிய தான் நடராசப் பெருமானது பாதத் தாமரையில் ஒன்றியிருக்கும் தேனீ என்றும் கல்லில் வெட்டிவைத்தான். இத்துணைச் செய்திகளையும் இவனது 7–ஆம் ஆண்டுக்குரிய திருவாரூர்க் கல்வெட்டு விளக்குகிறது 11.

குலோத்துங்கன் 1133 – இல் ஆடி மாதத்தில் முடிசூடியவன் 12. மன்னனது – 7 ஆம் ஆட்சி ஆண்டு கி. பி. 1140 –ஆடி மாதத்துடன்முடிவடைகிறது. எனவேதிருவாரூர்க்கல்வெட்டைக்

---

10. பெரியபுராணம்-திருமலைச்சிறப்பு-பாடல்கள் 37 முதல் 40 வரை.
11. S. I. I. VII No. 485.
12. N. Sethuraman – The Cholas Mathematics Reconstructs the Chronology page 14.

குலோத்துங்கன் பெரியபுராண விரிவுரையைக் கேட்டபிறகே வெட்டியிருக்க வேண்டும். அப்படியானல் அவ்விரிவுரை 1140 – இல் ஆடி மாதத்திற்கு முன் சித்திரை மாதத்தில் திருவா திரை நாளில் முடிந்திருக்கவேண்டும். விரிவுரைத் தொடக்கம் அதற்கு முன் ஆண்டு 1139 சித்திரைத்திருவாதிரையில் ஆரம்ப மாகி இருக்கவேண்டும். தொகுத்து நோக்கினல்,

1. தில்லையில் நடராசப் பெருமான் ஆலயத்தில் சேக்கிழார் பெருமான் பெரியபுராண விரிவுரையை 1139 – சித்திரை நாளில்தொடங்கினர். அந்நாள் கி. பி. 1139 –ஏப்ரல்மாதம் 6– ஆம் தேதி வியாழக் கிழமையாகும். அன்று சித்திரை 13 – ஆம் தேதி; மதியம் 12 – மணி வரை திருவாதிரை திகழ்ந்தது.

2. சேக்கிழார் பெரியபுராண விரிவுரையை அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரையில் முடித்தார். அந்நாள் கி. பி. 1140 – ஏப்ரல் மாதம் 22 – ஆம் தேதி திங்கட்கிழமை ஆகும். அன்று சித்திரை மாதம் 30 – ஆம் தேதி. திருவா திரை நட்சத்திரம் இரவு 12 – மணி வரை திகழ்ந்தது.

பெரியபுராணம் கேட்டபிறகு மன்னன் சேக்கிழாருக்குப் பொன்னும் பொருளும் வழங்கினன் அல்லவா? சேக்கிழார் அப் பொருளைக் கொண்டு திருநாகேஸ்வரம் கோயில் கட்டினர். கோயில் கட்டத் துவங்கியது கி. பி. 1140 எனலாம். கட்டி முடிக்கப்பட்டது 1145 என்றும், குலோத்துங்கனின் 1146–47 ஆம் ஆண்டுக்கு உரிய கல்வெட்டுக்கள் அக்கோயிலில் உள்ளன என்றும் முன்பே கண்டோம்.

பெரியபுராண விரிவுரை 1140 சித்திரையில் முடிவடைந்த பிறகு "பெரும்பற்றப் புலியூர் பூலோகக் கைலாசமென்று பொலிந்து தோன்றக்" குலோத்துங்கனும் தில்லையில் பெரு விழா எடுத்தான் 13. இதற்குச் சான்ருக மன்னனது திரு மாணிக்குழி கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டு மன்னனது 8– ஆம் ஆண்டில் கி பி. 1141–இல் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டு மன்னனைக் "கோராஜகேசரிவர்மரானதிரிபுவனச் சக்கரவர்த்திகள் தில்லைத் திருநகர் சிறப்புடையதாகத் திருமுடி சூடிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்" என்று அறிமுகப்படுத்து கிறது 14.

13. சேக்கிழார் நாயனர் புராணம் பாடல் 83.
14. S. I. I. VII No. 780.

குலோத்துங்கன் திருப்பேரம்பலம் பொன் வேய்ந்ததைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். திருமாணிக்குழியிலுள்ள குலோத்துங்கனின் 3-ஆம் ஆண்டு 1136-க்கு உரிய கல்வெட்டு "திருப்பேரம்பலம் பொன் வேய்ந்த பெருமாள் நல்லூர்" என்ற ஊரைக் குறிக்கின்றது 15. இம்மன்னனின் திருப்புறம்பியத்து 7-ஆம் ஆண்டு 1139-40-க்கு உரிய கல்வெட்டு மன்னனைப் "பேரம்பலம் பொன் வேய்ந்த கோவிராஜகேசரி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்" என்று குறிப்பிடுகின்றது 16. திருப்பாலைவனத்திலுள்ள 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டிலும் திருப்பேரம்பலம் பொன் வேய்ந்தருளிய கோவிராஜகேசரி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர் என்றே சொல்லப்படுகிறது 17. புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணத்து 12 - ஆம் ஆண்டுக் கல்வெட்டும் பேரம்பலம் பொன் வேய்ந்த கோவிராஜகேசரி குலோத்துங்க சோழ தேவர் என்று கூறுகிறது 18.

சேக்கிழார் பெருமான் பெரியபுராண விரிவுரை கூறுவதற்கே ஓராண்டு ஆயிற்று. 4253 பாடல்களைச் - சான்றுகளுடன் எழுதுவதற்கு 4 அல்லது 5 ஆண்டுகள் ஆகி இருக்க வேண்டும். இராசராசதேவர், சிவாலயதேவர் ஆகிய பலரும் பாராட்டிய நம்பியாண்டார் நம்பியின் கலித்துறை அந்தாதியை விரிவு படுத்தித்தூயகதை எழுதும்படி குலோத்துங்கன், சேக்கிழாரிடம் வேண்டுகிறான். அவ்வப்போது அதிகாரிகளை அனுப்பிக் கதை எத்துணை முடிந்துள்ளது என்று கேட்டு வரச்சொன்னான். தனது பாட்டனார்-முதல் குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் நரலோகவீரன் என்பவன் மூவர் முதலிகளின் ஏழு தேவாரத் திருமுறைகளைச் செப்பேட்டி லெழுதித் தில்லையில் வைத்ததை அறிவான் 19. இக்காரணங்களால் அவன் மனம் தேவாரத்தில் ஈடுபடுகிறது. செயலிலும் காட்டிவிடுகிறான். இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது இம்மன்னனின் சீகாழிக் கல்வெட்டு.

சீகாழி பிரம்மபுரீசுவரர் ஆலயத்தில் இன்று காட்சி அளிக்கும் திருஞானசம்பந்தரின் கோயில் இரண்டாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டதே. ஞானசம்பந்தர் கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் உள்ள இம்மன்னனின் 3-ஆம் ஆண்டுக்

15. S. I. VII No. 782.
16. A. R. E. 350/1927.
17. A. R. E. 315 and 348 of 1928-29.
18. S. I. I. VII No 1044.
19. S. I. I IV No 225 line 21.

கல்வெட்டே காலத்தால் முந்தியது. இதில் யாண்டு 3 – ஆம் சிம்மமாதம், நவமி,பூராட நட்சத்திரம்,திங்கட்கிழமைஎனக்கூறப் பட்டுள்ளது 20. இதன் காலம் கி. பி. 1135 ஆகஸ்ட்மாதம் 19–ஆம் தேதி ஆகும். இக்கல்வெட்டில் ஞானசம்பந்தர்கோயிலுக்கு அளித்த நிவந்தங்கள் கூறப்பட்டுள்ளன. அடுத்த கல்வெட்டு, மன்னனின் 4 – ஆம் ஆண்டு கி. பி. 1137–க்கு உரியது. சில சிற்பங்கள் பிரதிட்டை செய்யப்பட்டதும், சேதமான சிலைகளுக்குப் பதிலாகப்புதிய சிற்பங்கள் வைக்கப்பட்டதும் சொல்லப்படுகிறது 21. குலோத்துங்கனின் 10, 12, 17 – ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளில் கோயிலுக்கு அளித்த பல நிவந்தங்களும், மலர்த்தோட்டம் அளித்ததும் சொல்லப்பட்டுள்ளன 22.

கி. பி. 1135 - இல் திருஞானசம்பந்தர் கோயிலைச் சீகாழி ஆலயத்துள் குலோத்துங்கன் கட்டுவானேன் ? மூவர் முதலிகளின் பெருமையைச் சேக்கிழார் வாயிலாக அறிந்ததால் இக் கோயிலை எடுப்பித்தான் எனலாம். தில்லையில் நடராசப் பெருமான் " உலகெலாம் " என்று அடி எடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் பெரியபுராணத்தை எழுதத்தொடங்கும் போது மன்னனும் திருஞானசம்பந்தருக்குக் கோயில் எடுத்தான் எனக் கொள்ளலாம். தொகுத்து நோக்கினால்,

1. சேக்கிழார் 1135 – இல் பெரியபுராணம் எழுதத்தொடங்கினர். மன்னனும் திருஞானசம்பந்தர்கோயிலைக்கட்டினன். 4253 பாடல்கள் கொண்ட பெரியபுராணத்தைச் சேக்கிழார் 4 வருடத்தில் எழுதி முடித்தார்.

2. 1139 - சித்திரைத்திருவாதிரை நாளில் சேக்கிழார் தில்லை நடராசர் ஆலயத்தில் பெரியபுராண விரிவுரையைத் தொடங்கினர். (ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி வியாழக்கிழமை)

3. 1140-சித்திரைத்திருவாதிரையில் பெரியபுராணவிரிவுரை முடிவுற்றது (ஏப்ரல் 22 – திங்கட்கிழமை).

4. 1140 – இல் திருநாகேஸ்வரம் கோயிலைச் சேக்கிழார் கட்டத் தொடங்கினர்.

5. 1145 – இல் திருநாகேஸ்வரம் கோயில் கட்டி முடிக்கப் பட்டது.

---

20. A. R. E. 380/1918.
21. A. R. E. 381/1918.
22. A. R. E. 374, 377 and 378 of 1918.

செங்கல்பட்டு தாலுக்கா களத்தூர் முன்குடுமி ஈஸ்வரர் ஆலயத்தில் குலோத்துங்கனின் 12 – ஆம் ஆண்டு – 1145 க்கு உரியக் கல்வெட்டுகூறும் செய்தியைப் பார்ப்போம் 23. களத்தூரைச் சுற்றியுள்ள சில பகுதிகள் ஒன்றுகச் சேர்க்கப்பட்டு மன்னனின் பெயரால் "குலோத்துங்கசோழன் திருத்தொண்டத் தொகைநல்லூர்" எனப்பெயரிடப்பட்டது. மன்னன் இவ்வூரைக் கோயிலுக்குத் தேவதானமா வழங்கினன். இவ்வுத்தரவினை எழுதியவன் மன்னனின் அதிகாரி அநபாய மூவேந்த வேளான் ஆவான் இவ்வுத்தரவை நிறைவேற்றியவன் மன்னனின் அதிகாரி தொண்டைமான் ஆவான். இத்தொண்டைமான் – சேக்கிழாரின் தம்பியாரான பாலருவாயர் ஆவார்.

இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள் "பூமன்று பதுமம்" அல்லது "பூமேனிவளர" என்றுதொடங்கும். ஆரம்ப காலங்களில் இம்மெய்க்கீர்த்திகளில் மன்னனைக் குறிப்பிடும் போது, "இமயத்து மடக்கொடியும் சிவனும் போல வீரசிம்மாதனத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரிவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்" என்ற தொடர் வரும். பெரிய புராணம் கேட்ட பிறகு மன்னனது மனம் மாறுகிறது. இதனை மன்னனது பிற்காலக் கல்வெட்டுக்களில் காணலாம் "இமயக் கொடியுடன் சிவனருள் பெற்று வீரசிம்மாதனத்து வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரிவர்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்" என்று இக்கல்வெட்டுக்கள் மன்னனை அறிமுகப்படுத்துகின்றன.

காஞ்சிபுரம் வட்டம் மாகறல் திருமல்லீசுவரர் கோயிலில் குலோத்துங்கனின் 11 – ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது 24. இதன் காலம் கி பி. 1144 ஆகும். இறைவன் திருவகத்தீசுவரமுடையார், திருவிளாகம் பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளி இருக்க, பெரிய உடையார் தேவாரத்தே கேட்டருளிக்கோயிலுக்குத்தேவதான இறையிலியாக நிலங்கள் அளித்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இதனால் குலோத்துங்கன் தான் செல்லும் கோயில்களில் எல்லாம் தேவாரம்கேட்டு இறைவனை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டான் என்பதை அறியலாம்.

---

23. A. R. E 346/1911.

24. S. I. I. VII No. 428

திருவெண்ணை நல்லூரில் இறைவன் சுந்தரரை ஆட்கொண்டான். இவ்வூர் இறைவனின் பெயர் ஆட்கொண்ட தேவர் என்பதாகும். இக்கோயிலில் குலோத்துங்கனின் 15 – ஆம் ஆண்டு 1148 – க்கு உரிய இரண்டு கல்வெட்டுக்கள் அரிய செய்திகளைத் தருகின்றன 25 கோயிலின் தீர்த்தக்கரையில் சுந்தரர், பரவைநாச்சியார்; சங்கிலி நாச்சியாருக்கு ஒரு கோயில் எழுப்பினுன். நாச்சியாரோடும் பூசைகொண்டு அருளுகின்ற ஆளுடைய நம்பிக்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு ஊர்ச்சபையார் சிலநிலங்களை நிவந்தமாக அளித்தனர். இதனைக் கல்வெட்டு சுவைபடச் சொல்கிறது. "அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு உடலாக நாங்கள் இவ்வாளுடைய நம்பியின் ஸ்ரீஹஸ்தத்திலே நீர்வார்த்துக் கொடுத்த நிலமாவது" என்று சொல்லப்படுகிறது. சுந்தரர் இல்லறத்தில் நல்லறம் கண்டவர். அமுதுபடிக்குப்பின் அவர் தாம்பூலம் போட வேண்டாமா? அதற்கும் வழி செய்தனர். "ஆளுடைய நம்பிக்கு அடைக்காய் அமுதும் இலை அமுதும் செவ்விதாக இதயபூர்வமாகத்தானம் பண்ணிக் குடுத்த தோட்டமாவது" என்று கூறிச் செல்கிறது கல்வெட்டு

சுந்தரரின் சிலையில் திருக்கையில் நீர்வார்த்து – நிவந்தங்களை அளித்தனர். இச்செய்தி சிந்தனைக்கு உரியது. பெரிய புராணம் எத்துணை அளவுக்கு மக்களின் மத்தியில் புதிய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தது என்பதை இக்கல்வெட்டு படம் பிடித்துக்காட்டுகிறது. சுந்தரரின் சிலையைக் கற்சிலையாகநினைக்கவில்லை. உயிருடன் சுந்தரர் முன்னே நிற்பது போல நினைத்து அவரது திருக்கையில் நீர்வார்த்துக் கொடுத்தார்கள். மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழி அல்லவா!

குலோத்துங்கனுக்குப்பின் :

கி பி 1146 – இல் குலோத்துங்கன் தன் மகன் இராசராசனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி வைத்தான். 1150-இல் குலோத்துங்கன் மறைந்தான். இராசராசன் மாமன்னன் ஆனுன்.

இராசராசன் காலத்திலும் சேக்கிழார்பெருமான் வாழ்ந்தவர். இதனைப் பின்னுல் பார்ப்போம். சேக்கிழார் பெரியபுராணம் விரிவுரை சொல்லும் காலத்து – இளவரசனை இராசராசனும் உடன் இருந்து கேட்டிருப்பான் அல்லவா? அதனைப் படம்

25 S. I. I. VII Nos. 944 and 945.

பிடித்துக்காட்டுகிறது சீகாழி திருஞானசம்பந்தர்கோயிலிலுள்ள இராசராசனின் கல்வெட்டு. இக்கோயில் குலோத்துங்கனல் கட்டப்பட்டது என்பதை முன்பே கண்டோம். இக்கோயிலில் உள்ள இராசராசனின் கல்வெட்டு யாண்டு 12-ஆவது மேட நாயிற்று அபரபட்சத்தில் உத்திராடம் திகழ்ந்த திங்கட்கிழமை வெட்டப்பட்டது 26. இதன் காலம் கி. பி. 1148 ஏப்ரல் மாதம் 12-ஆம் தேதி ஆகும். திருக்கழுமலத்து ஆளுடையபிள்ளையார் கோயிலில் உள்ள மங்கையர்க்கரசி நாச்சியார் கோயிலுக்குப் பூசை வழிபாட்டுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன. இராசராசன் காலத்தில் மங்கையர்க்கரசிநாச்சியாருக்கு என்றுதனிக்கோயிலை – ஞானசம்பந்தர் கோயிலுக்குள் கட்டுவானேன்? சிந்தனைக்கு உரிய இச்செய்தியை அறிவதற்குப் பெரியபுராணத்தில் மங்கையர்க்கரசி நாயனுர் புராணத்தை நோக்கவேண்டும். சேக்கிழாரின் வாக்கைப்பார்ப்போம்.

மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வளவர்குலத் திருக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை.........

பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர்
போனக ஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல் பெறும் தவத்தினுர்...............

மங்கையர்க்கரசியார் சோழர் குலத்து அரசி. அவர் இராசராசனுக்கு 500-ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவர் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றவர் அல்லவா?

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி...

மண்ணெலா நிகழ மன்னனுய் மன்னு
மணிமுடிச் சோழன்தன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி...

என்று திருஞானசம்பந்தரால் பாடல் பெறும் பேறுபெற்றவர் மங்கையர்க்கரசியார். இவையாவையும் - சேக்கிழாரின் விளக்கவுரைகேட்டபோது இராசராசன் தன் இளமைக்காலத்தில் கேட்டிருப்பான் அல்லவா – அதன் நினைவாய்-1148-இல் திருஞானசம்பந்தர்கோயிலில் சோழர் திருக்குலக்கொழுந்தாம் – மங்கையர்க்கரசியாருக்கு – இராசராசன் தனிக்கோயில் கட்டினுன்.

---

26. A. R. E. 375/1918.

திருமழபாடியில் இராசராசனின்யாண்டு 17-ஆவது மகரநாயிற்று அபர பட்சத்து ஏகாதசியும், ஆயில்யமும் பெற்ற புதன்கிழமைக்கு உரியகல்வெட்டு ஒன்றுஉள்ளது 27. இதன்காலம்கி. பி. 1163, ஜனவரி மாதம் 2-ஆம் தேதி (தை மாதம் 9- ஆம் தேதி புதன்கிழமை). இக்கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப்புலியூர் கோட்டத்துக்குன்றத்தூர் நாட்டுக்குன்றத்தூர் மாதேவடிகள் இராம தேவனை உத்தமசோழப் பல்லவரையன் அளித்த நிவந்தம் கூறப்படுகிறது. இங்குக் குறிப்பிடப்படுபவர்சேக்கிழாரே. இராமதேவன் என்பது அவர் இயற்பெயர். இவ்வாறு வைணவப்பெயர் தாங்கிய இரு அடியார்களை 9-ஆம் திருமுறையில் காணலாம். உத்தமசோழப் பல்லவரையன் என்பது குலோத்துங்கன் சேக்கிழாருக்கு அளித்த பெயர். எனவே சேக்கிழார் 1163-இல் உயிருடன் இருந்தார் என்பதை இதனால் நன்கு உணரலாம்.

கும்பகோணத்திற்குத்தென்மேற்கில் நான்குகல் தொலைவில் இன்று காட்சி அளிக்கும் தாராசுரத்து இராஜராஜேஸ்வரம் என்னும் கோயில் இராசராசனால் கி. பி. 1167-இல் கட்டப்பட்டது 28. இக்கோயிலின் கர்ப்பக்கிரகச் சுவர்களில் 63 நாயன்மார்களின் வரலாறுகளைச் சிற்பங்களில் காணலாம். ஒவ்வொருசிற்பத்தின்மேல்பகுதியிலும்சிற்பத்திற்கு உரியநாயனாரின் பெயர் கல்லில் வெட்டப்பட்டுள்ளது 29. சேக்கிழார் பெருமான் 1163-இல் இருந்தார் என்பதை முன்பேகண்டோம். அவருடைய அறிவுரைப்படி இராசராசன் பெரியபுராணத்தைச் சிற்பங்களாக இக்கோயிலில் வடித்தான் எனக்கொள்ளலாம். தந்தைக்கு ஏற்ற தனயன் அல்லவா?

இராசாதிராசன் காலத்தில்:

இராசராசனின் மறைவிற்குப்பின் இவனது மருமகன் இராசாதிராசன் சோழ மாமன்னன் ஆனான். இராசாதிராசனின் திருவொற்றியூர்க்கல்வெட்டுசுவையான செய்தியைத் தருகிறது. யாண்டு 9-ஆவது பங்குனி உத்திரத்து ஆரும் திருநாளான ஏகாதசியும் புதன்கிழமையும் பெற்ற ஆயில்யத்து நாள் நடந்த செய்தி சொல்லப்படுகிறது 30. இதன் காலம் கி. பி. 1175 மார்ச்சு மாதம் 5-ஆம் தேதி ஆகும் இறைவன் திருவோலக்க மண்டபத்தே

27. A. R. E. 95/1920.
28. A. R. E. 17/1908 Raja Raja II year 21 N. Sethuraman The Cholas Mathematics Reconstructs the Chronology Page 170.
29. A R. E. 1920 Part II Page 102.
30. S. I. I. V No. 1358.

எழுந்தருளி ஆளுடைய நம்பியின் ஸ்ரீபுராணம் கேட்டு அருளா நிற்க என்றுகூறப்பட்டுள்ளது. திருவிழாக்காலங்களில் கோயில் களில் பெரியபுராணம் கூறும் வழக்கம் அதிவிரைவில் பரவி விட்டது என்னும் செய்தியினை இக்கல்வெட்டால் அறியலாம்.

மூன்றும் குலோத்துங்கன்:

மூன்ரும் குலோத்துங்கன் 1178 முதல் 1218 வரை அரசாண்ட வன். தன் பாட்டனாரும், தந்தையாரும் சேக்கிழாரைப் போற்றி யதை நன்கு அறிவான். குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் பெருமான் மறைந்தார். எனவே சேக்கிழார் நினைவாகக் கி. பி. 1185-இல் சிதம்பரத்தில் ஓர்மலர்த்தோட்டத்தை அமைத்தனன். அதற்குத்'திருத்தொண்டர் சீர் உரைத்தார் திருநந்தவனம், என்று பெயரிட்டான். இந்நந்தவனத்து மலர்களால் தினமும் நடராசப் பெருமானுக்கு அருச்சனை செய்யவும் ஆணையிட்டான். படிப்போர் கண்களில் ஆனந்தக் கண்ணீரைப் பெருகவைக் கும் இச்செய்தியினை மன்னனது சிதம்பரம் கல்வெட்டில் காண லாம் 31. " தொண்டர் சீர் உரைத்தார் " என்னும் இறந்த கால வினைத்தொடரை நோக்க வேண்டும். எனவே சேக்கிழார் 1185 - க்கு முன் மறைந்தார் எனக்கொள்ளலாம். (" திருத் தொண்டர் சீர் உரைத்தார் திருநந்தவனம் " பிற்காலத்தில் ஆட்சி புரிந்த கோப்பெருஞ்சிங்கனாலும் கி. பி. 1251 - இல் குறிப்பிடப்படுகின்றது 32.)

1203 - இல் திருவாஞ்சியத்திற்கு அருகில் உள்ள செவ்வூர்ச் சிவன் கோயிலில் " திருத்தொண்டர் சீர் உரைத்தாராகிய " சேக்கிழாரின் படிமம்வைக்கப்பட்டது. நாள்தோறும் வழிபாட்டிற் காக நிலங்கள் அளிக்கப்பட்டன. இச்செய்தியைக் குலோத்துங் கனது திருவாஞ்சியம் கல்வெட்டில் காணலாம் 33

பெரியபுராணம் பாயிரத்தில் சேக்கிழார் பெருமான் " திருத் தொண்டர் சீர் புகலலுற்றேன் " என்பார். கல்வெட்டுக்களில் " திருத்தொண்டர்சீர் உரைத்தார் " என்னும் தொடரைக் காண்கிறேம். இவைகளை உமாபதிசிவம் நன்கு படித்திருக்க வேண்டும். அவர் சேக்கிழார் பெருமானைத் " திருத்தொண்டர் சீர்பரவும் குன்றையாதிபதி சேக்கிழார் " என்று அருளிச் செய்தார்

---

31. A. R. E. 313/1958-59.
32. S. I. I. VIII No. 48 line 4
33. A. R. E 229/1938-39- Kulothunga III year 25.

கட்டுரை எண். 57

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit., D. P. P. A,. D. U. N., I. U.
பருத்தியூர்.

**ஐயன் அளந்தபடி இருநாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறஞ்செய்யும் உன்னையும்போற்றி ஒருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டுசென்று [பொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்! இதுவோஉன்றன் [மெய்யருளே. 56**

அ. ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம் உய்ய அறஞ்செய்யும்

(1) சிவபெருமான் படிப்பொருளாக வழங்கிய இரண்டு நாழி நெல்லினைக் கொண்டு உலகங்கள் அனைத்தும் உய்யும் வண்ணம், அன்னை முப்பத்திரண்டு அறங்களையும் புரிந்த சிறப்பினைக் குறிப்பிடுகிறார்.

(2) காஞ்சியில் இறைவன் அம்பிகையிடம் இரண்டு நாழி நெல்லினைப் படிப்பொருளாக வழங்கி உயிர்களுக்கு உதவுமாறு பணித்தான். அன்னபூரணி என்றபுகழுக்கு உரிய அம்பிகையும் அவ்விரு நாழியினை மட்டுமே கொண்டு, எல்லா அண்டங்களும் உய்யும் வகையில் முப்பத்திரண்டு அறங்களையும் புரிந்து அருளினாள். இருநாழி படிப்பொருள் அள்ள அள்ளக் குறையாது அண்டங்கள் அனைத்துக்கும் அறஞ்செய்ய வளர்ந்து விட்டதால் அம்பிகையின் மகிமை இறைவனால் உலகுக்கு எடுத்துக் காட்டப்பட்டது. அத்துடன், கணவனின் வரவுக்குள் சிறப்பாகத் தம்மால் இயன்ற அறஞ்செய்ய வேண்டு மென்ற இல்லற தருமத்தையும் இப்புராண வரலாறு உணர்த்துகிறது.

(3) பூவுலகத்து உயிர்களை மட்டுமன்றி நாம் அறிந்ததும் அறியாததுமாகிய அனைத்து உலகங்களில் இருக்கும் அனைத்து உயிர்களையும் அவள் அறம் வளர்த்ததால் ' அண்டமெல்லாம் '

என்றார். பல உலகங்கள் கொண்டது ஓர் அண்டம். இங்கு எல்லா அண்டங்களும் அடங்கியது. இருநாழி என்பது ஒரு படிக்குச் சமமாகும் என்பது பெரும்பாலோர் கருத்து. உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களைப் 'படி' என்பது வழக்கம். இன்றும் பஞ்சப்படி, வீட்டுவாடகைப்படி எனப் பலவாறாக வழங்கிவருகின்றது. இறைவன் நமக்கு இன்றி யமையாதனவாகிய உணவு முதலியனவற்றைவழங்கிவருகிறான். எனவே 'இறைவன் படியளக்கிறான்' என்று குறிப்பிடு கின்றோம். 'அளத்தல்' என்பது கொடுத்தல், தருதல், செலுத்து தல் போன்ற பொருள்களைத்தரும். 'திரை அளத்தல்' போன்ற வழக்கு இதனைத் தெளிவாக்கும். அவ்வாறு இறைவன் அளந்ததைக் கொண்டு அன்னை அண்டமெல்லாம் உய்ய அறஞ்செய்கிறாள்.

(4) அண்டமெல்லாம் உய்ய அறம்செய்ததால் அவளுக்கு 'அறம் வளர்த்தநாயகி' என்ற பெயர் உண்டாயிற்று. அப் பெயரே வடமொழியில் 'தர்ம சம்வர்த்தினி' என வழங்குகிறது. பல தலங்களில், குறிப்பாக, திருவையாற்றில் அவள் அறம் வளர்த்த நாயகியாகக் கோயில் கொண்டிருக்கிறாள்.

(5) 'தர்மிணி' என்றும் 'தர்மவர்த்தினி' என்றும் சகஸ்ர நாமம் புகழுகிறது. 'தர்மிணி' என்றால் அறத்துடன் கூடியவள் என்றும், 'தர்மவர்த்தினி' என்றால் அறத்தை வளர்ப்பவள் என்றும் பொருள். அறங்களை வளர்ப்பதோடன்றி, நல்லொழுக் கம் முதலான பண்புகளால் அடியார்களை வளர்ப்பதாலும் தர்மசம்வர்த்தினி ஆனாள்.

(6) "தொல்லை மறைதேர் துணைவர்பால் யாண்டுவரை
எல்லை இருநாழிநெற்கொண்டோர் — மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை"

என்ற தண்டியலங்கார மேற்கோள் பாடல் இதே கருத்தைக் கூறுகிறது.

(7) "அந்தமின்றி நல்லறம் புரிந்தளிக்கும் அன்னை தன் திருக்காமகோட்டம்" எனத் திருத்தொண்டர் புராணத்துள் இதனைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

(8) "சராசர அணுக்கள் உய்ந்திடுவான் அமைதரும் எண்ணான்கு அறந்தனைப் போற்றி ஆதி பீடத்தில் வீற்றிருக்கும் உமை" என்பது கச்சியப்பரின் கந்தபுராணக் கருத்து.

(9) மாறுமல் இருநிலத்தில் அறம் வளர்க்கும் கையே
மனையறத்தால் அறம்பெருக்கித் திறம்வளர்க்கும் கையே
ஆறுத ஜனங்கள் பசியாற்றும் இந்தக்கையே "

எனக் குற்ருலமலைக் குறத்தி அம்பிகையின் திருக் கரத்தினைப் போற்றுகிருர்.

(10) சிங்கை நமச்சிவாயப்புலவர் தமது வாழ்வில் வறுமையினைச் சந்திக்கவேண்டியிருந்தது. அப்போது அவர் உலகம்மையினைப் பார்த்துக் கேட்கிருர் :- "அனைத்துலகும் பசிதீர அறம் வளர்க்கும் உன் அடியானுகிய எனக்கும் நீ படியளக்கவில்லையெனில் இறைவனிடம் நீ பெற்றபடி 'குறைபடி' ஆகிவிடாதா?"

" பச்சைப் படிவத்து உலகே! இரண்டு படியுனக்குப்
பிச்சைப் படி நெல்லும் பெம்மான் அளப்பது, பேருலகம்
இச்சைப்படிக்குண்ணவன்றே? எனக்கில்லை என்னில் இந்தக்
கொச்சைப்படில் தன் பொருட்டாக அளக்கும் குறைப்
[படியே! "

— உலகம்மை கலித்துறையந்தாதி·

அம்பிகை வளர்த்த எண்ணன்கு அறங்கள் பற்றிய முழு விவரமும் இவ்வந்தாதி உரைத்தொடரின் பிற் சேர்க்கையாகக் காணலாம். ஈண்டு விரிக்கிற் பெருகும்.

ஆ. உன்னையும் போற்றி ஒருவர்தம்பாற் செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும் மெய்யும் இயம்பவைத்தாய்

(1) அறம்வளர்த்தநாயகியாகிய உன்னைப் போற்றிய புலவர்கள் பொருள் வேண்டி மற்றவர்களையும் நாடிச் சென்று, தமது செந்தமிழ்ப் பசுந்தமிழ்ப் பாமாலைகளையும் கொண்டு சென்று பொய்யும் மெய்யும சொல்லுமாறு நீ வைத்துவிட்டாய்.

(2) வேறு ஒருவர் தம்பால் ஒருகாலத்திலும் செல்லாமை வைத்த திரிபுரையாகிய அபிராமியைப் போற்றிப் புகழ்ந்த அபிராமிபட்டர் மன்னன் வரிசையினையும் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. மன்னன் பின்னர் அளித்த மானியங்களையும் மறுத்தார். "பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே " என்று பாடினர். ஆகவே, அவர், இங்கு, பொய்யும் மெய்யும் இயம்பும் மற்ற புலவர்களுக்காக வருந்தி அவர்களது நிலையினைத் தம்மீது ஏற்றிக் குறிப்பிடுகிருர் எனத் தெளிதல் வேண்டும்.

(3) அப்படி அவர்கள் பொய்யும் மெய்யும் இயம்புவது கூட அன்னையின் செயல் என்கிறார். "உன்னைப் போற்றிய அவர்களை நீ ஏன் அங்ஙனம் இயம்ப வைத்தாய்?" என்று அபிராமியிடமே வினவுகிறார். அப்புலவர்களின் பாடல்களில் புனைந்துரையும் பொய்யுரையுமே மலிந்து காணப்படுவதால் முதலில் பொய்யை வைத்தார். உண்மை பின்தங்கிவிடுவதால் மெய்யைப் பின்னால் வைத்தார்.

(4) அவர்கள் தாம் இழிவுபடுவதோடன்றிச் செம்மையும் பசுமையும் நிறைந்த தமிழ் மொழியினையும் அல்லவா இழிவு படச்செய்து விடுகின்றனர்? இதுதோன்றச் "செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று" என அடைமொழியும் 'உம்மையும்' கொடுத்தார். பொருள் தேடி ஒருவர் தம்பால் செல்பவர் அவரைமகிழ்விக்க ஒரு பூமாலையினை எடுத்துச்செல்வ தாவது மன்னிக்கத்தகுந்தது. ஆனால் இவர்கள் ஏன் பாமாலை யினையும் கொண்டு செல்கின்றனர்? என்ற பொருளும் தொனிக் கிறது. 'செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும்' என்ற இச்சிறுதொடர் அபிராமிபட்டரின் தமிழ்ப்பற்றினைத் தெளிவாக எடுத்துக்காட்டு கிறது. சமயத்தையும் தமிழையும் ஒருசேரப் போற்றியவர்களுள் இவரும் ஒருவரே.

(5) "மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக் கிவனென்று கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும்" என்ற தேவாரத் தொடர் அத்தகைய புலவர்களைக் காட்டுகிறது.

(6) இறைவன் சந்நிதியில் தொண்டாற்றுதல் சுகமா? பணமும் நரஸ்துதியும் சுகமா? என வினவும் தியாகராஜ கீர்த்தனை இங்கு நினைவுக்கு வரும்.

(7) இறைவனின் திருவிளையாடல்களைக் குறித்து, 'சிவ லீலார்ணவம்' என்ற வடமொழிநூல் இயற்றிய நீலகண்ட தீட்சிதர் அவர்கள் சிறந்த தேவி உபாஸகரும் ஆவார். அவர் மதுரையில் நாயக மன்னனிடம் அமைச்சர் பணியில் அமர்ந் திருந்தார். சிறந்த ஓவியன் ஒருவன் எழுதி வந்த அரசியின் ஓவியம் ஒன்று அவையில் பரிசளிக்க மதிப்பீட்டுக்காக வந்தது. வண்ணச்சிதறல் ஒன்று காணப்பட்டதால் அனைவரும் அதனைக் குறையுடைய ஓவியம் என்றனர். நீலகண்ட தீட்சிதர் மட்டும் அதுசிறந்த ஓவியமே என்றார். ஏனெனில், ஓவியத்தில் வண்ணத் துளி இருக்கும் அரசியின் தொடைப்பகுதியில் மச்சமொன்றிருக் கிறது என்றார். அதனை அவர் சாமுத்ரிகா சாஸ்திரப்படி ஊகித்துக் கூறினார். ஆனால் மன்னனும் மற்றவர்களும் அரசியுடன் அவருக்கு அந்தரங்கத் தொடர்பு இருத்தல் வேண்டும் எனத்

தவருக எண்ணினர்; ஏசினர். அப்பழியுடன் வீடுதிரும்பிய நீலகண்ட தீட்சிதர் தான் வழிபடும் அம்பிகை முன் அமர்ந்து கூறினர்:- "அன்னையே! உன்னைப்போற்றிப்புகழ்ந்து வழிபடும் நான் வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு மன்னனை நாடிச் சென்றேனே! அதற்குத் தண்டனைதான் இப்போது எனக்கு வந்து சேர்ந்த வீண்பழி! ஏன்? இதுகூடப் போதாது! இன்னும் தண்டனை வேண்டும்" என்று கூறியவர் கற்பூரத்தீயால் தனது இருவிழிகளையும் சுட்டுக் குருடாக்கிக் கொண்டுவிட்டார். அச்சமயம் அங்கு வந்த மன்னன் பதறிவிட்டான். "தாங்கள் தயவுசெய்து அம்பிக்கையினை வேண்டிப் பார்வையைப் பெறுதல் வேண்டும்" என மன்ருடினன். அதன்படியே அவரும் அம்பிகையினைத் துதித்து 'ஆனந்த சாகரஸ்தவம்' என்ற நூறு பாடல்களைக் கொண்ட நூலினைப் பாடினர். முடிவில் அம்பிகை அருளால் பார்வையும் பெற்ருர். பழியும் நீங்கியது. இவ்வரலாற்றில் ஒருவர் தம்பாற் சென்றதற்காக அவர் வருந்திய நிலை புலப்படுகிறது.

இ. இதுவோ உன்றன் மெய்யருளே ?

(1) உன்னைப் போற்றியவர்களை ஒருவர் தம்பாற் சென்று பொய்யும் மெய்யும் இயம்ப வைப்பது தான் உனது உண்மையான அருளா?

(2) எல்லாம் தரும் அறம் வளர்த்த நாயகியாகிய நீ மேற்குறித்த அவல நிலையில் புலவர்களை வைக்கலாமா? அதன் உண்மைப்பொருள் என்ன? இதுதான உனது மெய்யருள்? நான் அறியேன்.

(3) "நின்பக்கல் அன்பிலாப் பாவியர் படுதுயரம்
நின்னடியார் தாம் உறுவதும்
நினை என்றும் மறவாத புண்ணியர் பெருஞ்செல்வம்
நிர்முடர் தாம் பெறுவதும்
அன்புடன் நல்லறஞ் செய் தரும சாலிகள்
அல்லலால் மனம் நோவதும்
அறந்தனை மறந்திடும் அசத்தியப் பேயர்கள்
அகமகிழ்ந்தே வாழ்வதும்
உன் மகிமையோ அலது கலியுகப் பெருமையோ ?"

என்ற சுவாமிமலை நவரத்தினமாலைப் பாடலும் இவ்வாறே இறையருளின் உண்மைநிலை புரியாத தன்மையினை வினவாகவே விடுக்கிறது! உணவு, உடை முதலான இன்றியமையாத பொருட்களைக் குறைவின்றிஎய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,

(மலர் 44, இதழ் 3, பக்கம் 150 இன் தொடர்ச்சி.)

சிவசக்தி யாய்விந்து வாய்மனோன் மணியாய்த்
திருந்திடும கேசை உமையாய்ச்
செங்கமலை வெண்கமலை யாய்அருவ முருவமாய்ச்
சிற்பரை யொருத்தியாவாள்
இவளுநவ மிப்படிசொல லெல்லைபிரி யாதபே
ரென்பொடர வாபரணராய்
இன்பமுத் தித்திருவைபிவர் மணம் புணர்கால
மென்றகில நாதர் குருவாய்,
புவனங்கள் தொழமந்த்ர மறைசொலக் கங்கையலை
பொற்குட முழாமுழக்கப்
போதமிகு நித்யகல் யாணமண வறையாய்ப்
புகழ்கொண்ட காசியிவளூர்
அவள் பெரிய பேரிந்த மைந்தருக் கானந்த
மானபால் பழமளிக்கும்
அண்டகோ டிகள்பணி அகண்டபூரணி யென்னும்
அன்னபூ ரணியன்னையே. (5)

(பொ - ரை) கங்கை, அலையென்ற பொற்குடமுழவை முழக்க – அழியாத ஞானம் நிறை காசி இறைவியின் கல்யாண மணவறையாய்ப் புகழ்கொண்டது. அப்பதியில் அளவுகண்டு உணரமுடியாதபேர்களின் என்புடன் அரவையும் ஆபரணமாக அணிந்த அகிலேசர், பேரின்பமாம் முத்தித்திருவை ஆன்மா மணம்புரியும் காலம் இதுவென்றறிந்து குருவாய், புவனங்கள் தொழவந்து மறைமந்திரமாம் தாரகத்தினை உபதேசிக்கிறார். அந் நேரத்தில் சிவனுக்குச் சக்தியாகவும், நாதத்திற்கு விந்துவாகவும் சதாசிவனுக்கு மனோன்மணியாகவும், மகேசுரனுக்கு மகேசுவரி யாகவும், உருத்திரனுக்கு உமையாகவும், திருமாலுக்குத் திருமக ளாகவும், பிரமனுக்கு சரஸ்வதியாகவும் அருவ உருவமென்று

இப்படித்துதிக்கப் படுகின்ற வடிவங்களில் விளங்கும் சிற்பரை யென்ற ஒப்பற்றவள் அகண்ட பூரணி யென்ற பெரிய பேரைக் கொண்டவள் இந்த (முத்திபெறும்) மைந்தர்களுக்கு ஆனந்த மென்ற பாலையும் பழத்தினையும் தந்து அருளுகிறாள். அப்படியான அன்னபூரணியை அண்ட கோடிகள் பணிகின்றன.

(கு – ரை) இந்தப் பாடலின் பொருள் ஆற்றொழுக்காக இல்லை. இப்படிச்சொல் – இப்படித் துதிக்கப்படுகின்ற, எல்லை-அளவு என்று கொண்டு, பிரியாத-பிரிக்க முடியாத என அமையலாம். 'ஒன்றிரண்டென் றெண்ணிப் பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிடலாகும்' என உமாபதிசிவம் வாக்கு அமைகிறது (சேக் – புரா 51) இவர் – விரும்புதல் என்ற (1972 - ம் வருட பதிப்பிலுள்ளது) பொருளைக் காட்டிலும் ஆன்மாவைச் சுட்டும் சொல்லாகக் கொள்ள பொருள் விளக்கம் தெளிவாகிறது. பெரிய பேர் – அகண்ட பூரணியென்ற பெயர். முத்தித் திருவை மணம் புணர்பவர்களுக்குப் பால் பழம் அளித்தல் பொருத்த முடையதேயன்றோ. இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளமைகாண்க. இறைவியின் சக்தி பேதங்களைச் சிவஞான சித்தியார் கூறும்,

சத்தியாய் விந்துசத்தி யாய்மனோன் மனிதானுகி
ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்

(சு - 2 - 165)

இறைவன் எலும்பணிதலை – திருவாசகத்தில் காண்க. (நங்காய் ஈதென்னதவம் நரம்போ டெலும் பணிந்து' திருச்சாழல் 11 (தலையேந்து கையானையென்பார்த்தானைச் சுவந்தாங்கு தோளானை') (6 – 90 – 2) என்பார் அப்பர் சுவாமிகளும்.

துள்ளித் துடித்தழ வடித்துப் பிடித்துச்
சுறிரென் றிடக்கிள்ளியே
துட்டநா யேவிடென் றன்னைக்கோ பித்துத்
துரத்தினுந் தாய்கால்விடாப்
பிள்ளையென நீபெற்ற பிள்ளைநா னேயாது
பிழையனந் தங்கோடிசெய்
பேய்ப்பிள்ளை யானாலு மெனையறிவி லாமுழுப்
பேதையென் றேயிகழ்ந்து

தன் ளிவிட் டாலுமுன் பாதம் பிடித்துநின்
றனதுவீ டாங்காசியிற்
சாவே னெனக் கிடப்பேற்கு முன்சொல் லன்னை
தன்கையாற் பிள்ளைகன்னம்
அள்ளியே தன்முலைப் பால் கொடுப் பாளென்ன
அருள் முலைப் பால் கொடுப்பாய்
அண்டகோடி கள்பணி யகண்டபூ ரணியென்னும்
அன்னபூ ரணியன்னையே. (6)

(பொ - ரை) துள்ளித் துடித்து . அழும்படி அடித்துப் பின்னும் ஓடாவண்ணம் பிடித்துச் சுரீரென்றுணருமாறு கிள்ளி, 'பொல்லாத நாயே என்னைவிடு !' என்றன்னை கோபித்துத் துரத்தினும் தாய் கால்விடாப் பிள்ளைபோல நீ பெற்ற பிள்ளை நான். ஓயாமல் எண்ணற்ற தவறுகள் செய் பேய்ப்பிள்ளையானாலும்- என்னை அறிவற்ற முழுமூடன் என்றே யிகழ்ந்து தள்ளினுலும் உன்பாதம் பற்றி நினது வீடான காசியில் தான் சாவேன் என்று கிடப்பேன். முன் சொன்ன அர்த்த தாய் பின்னே பரிவோடு தன் பிள்ளையின் கன்னத்தில் முத்தம் தந்து தன்முலைப்பால் கொடுப்பாள். அப்படி நீயும் அருளாம் முலைப்பாலைத் தந்து ஆட்கொள்க.

(கு-ரை) தாயின் அளப்பரிய கருணைக்கு இப்பாடல் நல்ல எடுத்துக்காட்டு. 'பெற்றதாய்தனை மகமறந்தாலும்-பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்' - என வள்ளலார் இராமலிங்கரும் - மறக்கவியலாமையைச் சுட்டுகிறர். ' தருதுயரம் தடாயேல்' - என்ற பாடலில் ' அரிசினத் தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழுங்குழவி' -எனக்குலசேகர ஆழ்வார் கூறியது காண்க.

பவமெனுஞ் சாகரத் தாக்கையெனும் ஓட்டையாம்
படகின்மே லேறிநிற்பேன்
பரையருட் காற்றின்றியே பிணிச் சுழலினுட்
பட்டுத் திகைதப்பியே
கவலைகள் வராமலே கௌரியுன் கரகம்ப
காருண்ய வுத்தரியக்
காற்றிறைவர் தாரகச் சத்தமொ டெறிந்தருட்
காசியூ ரானந்தமாஞ்

சிவமெனுங் கரைதுறையி லேறவரு ளெண்ணிலாச்
செகதண்ட மீன்றுவைத்துச்
சிறைக்கர மணைக்கு மயிலே நானெனுஞ்சிறிய
செந்துக்கு மபயமென்பாய்
அவனவளொ டதுவெனுஞ் சீவகோடி களின்மர
ணந்தத்தி லபயமென்பாய்
அண்டகோ டிகள்பணி யகண்டபூ ரணியென்னும்
அன்னபூ ரணியன்னையே. (7)

(பொ-ரை) பிறவியெனும் கடலில் உடலென்ற ஒட்டைப் படகில் ஏறிநிற்கிறேன். பராசக்தியின் அருளாகிய காற்றில்லாமல் பிணியாகிய சுழலுள்பட்டுத் திசைதப்பியேசென்று கவலைகள் வராதபடி கௌரி! கருணையினல் உன்கை மேலாடையை அசைக்க எழும் காற்று - இறைவனின் தாரக ஒலியோடுவந்து காசியாம்ஊரில் ஆனந்தமான சிவமெனுந் துறையிலேற அருள் செய்திடுக. எண்ணிலடங்கா உலகங்களான முட்டைகளை ஈன்று இயற்கையாம் கரங்களால் அணைத்துப் பாதுகாக்கும் மயிலே! அவன் அவள் அதுவென்று சுட்டப்படும் பேதமுடைய உயிர்களின் மரணகாலத்தில் அபயந்தருபவளே! அண்டங்களை நோக்க நான் ஒரு சிறிய செந்து. எனக்கும் அபயந்தந்தருள்க.

(கு-ரை) பவமெனும் சாகரம் - பிறவிப் பெருங்கடல். 'மனமெனுந் தோணிபற்றி' - என்ற திருநாவுக்கரசர் (4-46-2) வாக்கும் இதே கருத்தை உணர்த்துகின்றது.

படகு திசைதப்பிச் செல்லாதவாறு கரையிலிருப்போர் துணியை அசைத்தும் வாயால்ஒலியெழுப்பியும் ஆதரவுதருதலை - அப்படியே கூறினர். மின்னுமுத்தரியத்தை உயிரின் மரணந்த காலத்தில் இவள்வீச - இறைவன் தாரகம் உபதேசிப்பது - முன்பும் குறிக்கப்பட்ட செய்தியே. செந்து - சிறியஉயிர். 'சில்லாண்டிருந்து சிவமாய்ச் செலுஞ் சிறு செந்துக்களே' (காசிக்கல. 49) அவனவள் அதுவெனும் சீவகோடிகள் - 'அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்' - என்ற வாக்கை அப்படியே ஆண்டது காண்க. (சிவஞா போ - சூ 1)

(தொடரும்)

திருத்தலங்களின் சிறப்பு

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

ஆசிரியர் : 'திருக்கோயில்', சென்னை - 34.

தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தலவழிபாட்டின் மேன்மையும் அளவற்றன. அருளாளர்கள் வாழ்கின்ற இடங்கள் புனிதம் அடைகின்றன. அவ்விடங்களில் அருளாற்றல் பதிகின்றது; அவ்விடங்களிலிருந்து அருள் அலைகளும், அருட் கதிர்களும் வீசுகின்றன. அவைகளின் மூலம் அவ்விடங்களில் அமைதி தரும் சூழ்நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி அவ்விடங்களுக்கு மேலுலகில் வாழும் அருளாளர்கள் வந்துசெல்லுகின்றனர். அதனால் அவ்விடங்களில் அவர்களின் தெய்வீக நலங்களும் ஆற்றல்களும் பதிந்து பரவிப் பெருகுகின்றன. இவற்றால் அவ்விடங்கள் புனிதம்மிக்க புண்ணியத்தலங்களாக மாறுகின்றன. †

நாம் நம் வாழ்க்கையில் கூர்ந்துநோக்கி ஆராய்ந்து நினைந்து காண்போமாயின், ஒருசில இடங்கள் வேறு பிறசில இடங்களை விட மனத்திற்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் விளைவிப்பதைக் காணலாம். சிலஇடங்கள் மனம்குவிந்து தியானம்செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். அவ்விடங்களில் தெய்வச் சிந்தனைகளும், நல்ல சமய உணர்வுகளும், பக்திநெறிப் பாவனைகளும் இயல்பாக உண்டாகும். ஆனல் வெறும் உலகியற் சிந்தனைகளும் செயல்களுமே நிகழ்கின்ற இடங்களிலும், வீண்பேச்சுக்கள், பயனற்ற பொழுதுபோக்குச் செயல்கள், வறுமொழியாளர் வம்பப்பரத்தர் போன்ற தீயவர்கள் நடமாட்டம் ஆகியன

---

† "Places may similarly be made sacred, by the living in them of saints, whose pure magnetism, rediating from them, attunes the whole atmosphere to peace - giving vibrations' Sometimes holy men, or beings from the higher worlds, will directly magnetize a certain place, as in the case mentioned in the Fourth Gospel, where an angel came at a certain season and touched the water, giving it healing qualities .. "

நிகழும் இடங்களில், மேற்குறித்தவற்றிற்கு நேர்மாறான இயல்புகளும் செயல்களும் அநுபவங்களுமே, நம்மிடப் நிகழ்தலை நாம் நம் வாழ்க்கையில் கண்டுணரலாம். *

இத்தகைய தீய இடங்களின் வேறாக, அருள்நிறைந்து விளங்கும் அருமைப் பெருமை மிக்க தூய புனிதப் புண்ணிய இடங்களையே திருத்தலங்கள் என்று, நம் முன்னோர்களும் பெரியோர்களும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து வந்துள்ளனர்.

தமிழ் நாட்டில் தோன்றிய நால்வரும், பன்னிரண்டு ஆழ்வாரும் தெய்வத் திருவருட சக்திமயமானவர்; எல்லாம் வல்லவா. அவர் என் செய்தனர்? அவர் தமிழ் மறைகளை உலகுய்யத் தந்தனர். எம்முறையில் தந்தனர்? திருப்பதிகளிலுள்ள ஒவிய உருவைப் போற்றும் வாயிலாகத் தமிழ் மறைகளைத் தந்தனர். அவர் திருப்பதிகளை நேரே சென்றும் பாடினர்; நேரே செல்லாமலும் பாடினர். அவரால் பாடப்பெற்ற திருப்பதிகளின் தொகை ஆயிரத்து நூற்றுப்பதினாறு (ஆயிரத்தெட்டும் நூற்றெட்டும்) ஆகும். அக்குருமார் அருளிய மறைமொழிகட்கு எவ்வளவு ஆற்றல் உண்டோ, அவ்வளவு ஆற்றல் அவர்தம் திருநோக்குப் பெற்ற கோயில்கட்குமுண்டு. அக்கோயில்களை விடுத்து அவரது நல்லெண்ணங்கள் நீங்கவே மாட்டா. உலகிலுள்ள தீமைகளெல்லாந்திரண்டு ஒருக்கொண்டு அக்கோயில்களைத் தாக்கினாலும், ஆங்குள்ள நல்லெண்ணங்கள் அசைய மாட்டா; அகலமாட்டா. அத்தீமைகளையெல்லாம் நீறாக்கும்

---

* "Anyone who observes hi r self will find that some plac s are more couducive to calm, to medit tion, to religious thought to worship, than others. In a room, a building, frivolous conversation, of mere rush of ordinary wordly life it is far harder to quiet the mind and to concentrate the th ught, than in a place where religious thought has been carried on year after year, century after century; there the mind becomes calm and tranquil and that whieh would have demanded serious effort in the first place is done without effort in the second. This is the rationale of places of pilgrimage..."

— Dr. Annie Besant,
Esoteric Christianity, p. 260

ஆற்றல் பெரியோர் நோக்குப் படிந்த கோயில்களுக்குண்டு. மலைகள் அழியலாம்; கடல்கள் அழியலாம்; உலகம் அழியலாம்; திங்கள் அழியலாம்; ஞாயிறு அழியலாம்; பிற அழியலாம்; பெரியோர் எண்ணங்கள் அழியா. கோயில் கட்டிடங்கள் அழிந்தாலும் அவைகளைச் சூழ்ந்துள்ள நல்லெண்ணங்கள் அழியா. அவை மீண்டும் ஒருகாலத்தில் கோயிலாகும். கோயில் கல்லன்று; மண்ணன்று; சுண்ணமன்று. அஃது எண்ணம், நல்லெண்ணம்; சக்தி வாய்ந்த எண்ணம்; தெய்விகச் சக்தி வாய்ந்த எண்ணம். அவ்வெண்ணம் இந்நாளிலும் தியானத்திற் சிறந்த அன்பர்கட்குப் பெருஞ்சக்தியை - உலகைத் திருத்தும் வல்லமையைக் - கடவுள்தன்மையை - வழங்கியே வருகிறது.

தலயாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகத்தில், நம்முடைய குறுகிய வாழ்நாளில், நாம் அடையக்கூடிய ஏதோ ஒருசில இன்பங்களில், உண்மையானதும் உயர்ந்ததும் ஒப்புயர்வற்றதும், தல யாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தலயாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுக்கள் அகன்று, நாம் ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுக் கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளிலுள்ள பல மக்களைக் கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்துகொள்ளுகின்றோம். தலவழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும் புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. உள்ளம் விரிவடைகின்றது. உணர்வு பண்படுகின்றது இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன நாம் நம் முன்னோர்களுடைய அருமைப் பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும் பெரும் செயல்களையும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருள் ஆற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் தொடர்புபெற்ற தலங்களையும் கோயில்களையும் காணுகின்றபோது, ஒருவகையில் அவர்களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றன.

அன்பகம் ஓர் அறிமுகம்

கவிஞர் மு. மேத்தா

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருங்கருணையுடன் சமய சமுதாயப்பணிகள் புரிய ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் ஒரு பணிமன்றம் நாடு தழுவியநிலையில் நிறுவியுள்ளார்கள், அதன் அங்கமாகச் செவிடர், ஊமையர் பள்ளி "அன்பகம்" என்றபெயரில் 52 – A, மகாதானத்தெரு, மயிலாடுதுறை 609001. (தொலைபேசி எண்:– 2646) நடைபெற்றுவருகின்றது. அப்பள்ளியில் 27 செவிடு – ஊமையரும் 2 மனநோய் மாணவர்களும் பயிற்சிபெற்றுவருகின்றனர். உணவுவிடுதியில் 7 மாணவர்கள் தங்கியிருக்கின்றனர். அவர்களது முன்னேற்றம் கருதி அன்பர்கள்பலரும் பெருவுளம் கொண்டு உதவிவருகிறார்கள். அவர்களைப் பற்றிக் கவிஞர் திரு. மேத்தா அவர்கள் அழகுபடப் பாடியுள்ளார்.

வசந்தகாலக்குயில்கள் வாய்மூடிக்கிடக்கின்றன
வாய் ஆலைகளில் கதவடைப்பு!
செவிகளின் தொழிற்சாலையில் நிரந்தரமான
வேலை நிறுத்தம்!

காது கேளாமல் வாய் பேசாமல்
இங்கே மௌனத்தின் அரசாட்சி!
இவர்களிடம் பேசுவதோ மனசாட்சி!
இந்தப் பிளளைத் துறைமுகங்களில்

சொல்லை ஏற்றுமதி செய்வதும் இல்லை ...
இறக்குமதி செய்யவும் வாய்ப்புகள் இல்லை.
இது மயிலாடுதுறை – அல்ல!
நல்ல மனம் ஆடுதுறை

நல்ல மனம் நாடு துறை!
ஆமாம் மன மயிலாடும் துறைமுகம்! – இருபத்தாறும்
குருமகாசந்நிதானம் அருள்முகம்! – அதனால்
அன்பகம் இங்கே அறிமுகம்!

இது மனக்குறை போக்கும் மருத்துவ நிலையம்!
உடற்குறைவு நெஞ்சை உருத்தா திருக்க
மனக்குறை நீக்கும் மருத்துவ நிலையம்.
இங்கே வெள்ளையடிக்கப்படுவது மாளிகைகளுக்கு அல்ல

மனசுகளுக்கே ! ஆமாம்
அழுக்குக் கவலைகளை அகற்றி
மனிதர்களின் மனசுகளுக்கு இங்கே
வெள்ளையடிக்கப்படுகிறது.

அன்பகம் – இங்கே ஓர் அறிமுகம் !
இது அன்பு மனங்களின் ஆசை முகம் !
சத்தத்தால் உலகில் சச்சரவு வருகிறது ...
இந்த தேவ குமாரர்களோ மௌனத்தால் பூமியை

மகத்துவப் படுத்துகிறார்கள் !
வார்த்தைக் கத்திகள் வாழ்க்கையைக் கிழிக்கின்றன !
மௌன ஊசிகள் அதைத் தைக்கின்றன.
இரண்டு உதடுகளையும் ஒன்றுக்ச் சேர்த்து,

தற்காலிகமாகத் தைத்துக்கொடுக்கின்றன.
காது இருப்பதால் நாங்கள்
கேட்கக் கூடாததெல்லாம் கேட்கவேண்டியுள்ளது.
நீங்களோ இதயத்தைச் செவியாக்கி இயங்குவதால்

உங்களிடம் உதயமாவதெல்லாம்
உன்னதம் அல்லவா ? ஆமாம் உன்னதமே !
வெளிச்சம் விழிகளிலிருந்தல்லவா
இதயத்திலிருந்தல்லவா ஏற்படவேண்டும் !

நீங்கள் பேசவில்லை ஆனாலும்
பேசாமலும் இல்லை இதயத்தால் பேசும்
உங்கள் இனிய மொழிக்கு
உலகத்தில் எந்த மொழியாவது

இணையாக முடியுமா ? எப்படி இணையாகும் ?
ஞானமற்றிருப்பவரே நடமாடும் உலகத்தில்
நீங்கள் ஊனமுற்றிருப்பதனால் ஒரு குறையும் வாராது
இங்கே ஊனமுற்றது உடல்தானே —

மனம் அல்லவே ... !
மனித குலத்துக்கெல்லாம் மனமே சிறகு !
வாயும் செவியும் மற்றவையும் பிறகு !
நீங்கள் நிமிர்ந்து நில்லுங்கள் ! நில்லுங்கள் !

உள்ளங்களால் நீங்கள் உலவும்போது உலகம்
உங்களை விட உயரம் குறைந்து விடுகிறது.
ஐந்து புலன் இருந்தும் அந்தோ !
ஆமையாய்க் கிடப்பதைவிட ஒரு புலன் குறைந்து

ஊமையாய் இருப்பதால் ஒன்றும் குறைவில்லை —
அவிழ்க்க முடியாமல் உங்களை
அவதிப்படுத்தும் விரக்தியின் முடிச்சுக்களை
வெட்டி எறியுங்கள் ! விரும்பி அறியுங்கள் !

உங்களுடைய புண்களின் மீது
புன்னகையைத் தடவுங்கள் !
எதிர்காலத்தை எழுதுவதற்கு உங்கள்
மனதில் பட்ட காயங்களில் மை தொட்டுக் கொள்ளுங்கள்!

போர்வைகளில் ஒரு நாளும் புதைந்து கிடக்காதீர்கள்
விழித்து நீங்கள் எழுந்தால் விலங்குணர்வு நொறுங்கும் !
சின்னக் குறைகளா உங்களைச்
சிறைப்படுத்தி வைப்பது ?

ஓ ! புறக்கணிக்க முடியாத பூமியின் பூக்களே !
திசைகளையெல்லாம் தழுவும்தென்றலின் விரல்களே நீங்கள்
விழித்தெழும் திசையே பூமிக்குக் கிழக்கு !
உங்கள் விரல்களில் அடங்கும் சூரிய விளக்கு !

நாளை மட்டுமல்ல இன்றும் உங்களுடையதுதான் ...
உணருங்கள் ...
கடந்த காலச் செருப்புகளைக் கழற்றி எறியுங்கள்
உங்கள் எதிர்காலத்திற்கான சிறகுகளைச்

சேகரித்துக் கொள்ளுங்கள் ! சிரியுங்கள் !
உங்கள் உழைப்பின் இரதங்கள் ஓடிவரும் பாதையில்
தடையாக வைத்திருக்கும் தோல்வியின் கற்கள் எல்லாம்
தூள் தூளாகட்டும்! தோன்றாமல் போகட்டும் !

நம்பிக்கை மட்டும் நமக்கொரு கையானால்
இமய மலையைக் கூட — இங்கே நாம்
இழுத்து வரலாம் ! ஏற்றங்கள் பெறலாம் !
அந்த மூன்றாவது கையை – உங்களிடம்

முளைக்கச் செய்யவே அன்பகம் இங்கே
ஆரம்பமானது ! — ஆனந்தம் பெருகட்டும் !
தருமை ஆதீனம் ! – இஃது அருமை ஆதீனம் !
மன மயிலாடும் துறைமுகம் – இருபத்தாறும்

குருமகாசந்நிதானம் அருள்முகம் – அவர்தம் திருமுகம் !
இங்கே அன்பகம் – இப்போது
அறிமுகம் ! அறிமுகம் !! அறிமுகம் !!!

கதிரவன் குடும்பம்

4. புதன் கிரகம்

கதிரவன் குடும்பத்தின் உள்நிலைக் கோள்களில் (Inner Planets) அதாவது கதிரவனுக்கு அண்மையில் உள்ள கோள்களில் முதலாவதாக உள்ளது புதன்கிரகம் ஆகும். புதன் ரகம் ஆங்கிலத்தில் 'மெர்குரி' (Mercury) என்று அழைக்கப்படும். இக் கிரகம் பகலவனுக்கு மிகவும் பக்கத்தில் முதலாவது கிரகமாக ஒளிர்கிறது. எனவே இஃது என்றும் பகலவன் ஒளிவெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கும் பகட்டான வாய்ப்பைப் பெற்றது. இக் கிரகம் சூரியோதயத்திற்குச் சற்று முன்னதாகவோ அன்றி, சூரியன் சற்று மறைந்த பின்னரோ தான் வானவெளியிலே வரக்காணலாம். சூரியமண்டல கிரகங்களில் மிகச்சிறியது புதன் கிரகமே ஆகும். இது கதிரவனுக்கு மேலோ கீழோ வரும் சமயத்தில் தான் நமக்குத் தனது காட்சியைத் தருகிறது.

புதன் என்ற இக்கிரகம் பகலவனிடமிருந்து சராசரி 3, 60, 00, 000 (மூன்று கோடியே அறுபது இலட்சம்) மைல் தொலைவிலுள்ளது. இஃது உச்சத்தில் 4, 30, 00, 000 (நான்கு கோடியே முப்பது இலட்சம்) மைலும், அடிப்புரத்தில் 5, 80, 00, 000 (ஐந்து கோடியே எண்பது இலட்சம்) மைல் தொலைவிலுமுள்ளது. இவ்வளவு தூரமும் வானவெளியில் ஒரே முழம் தூரம்போல் தோன்றும் – இக்கிரகத்தின் குறுக்களவு (விட்டம்) 3100 மைல்கள் மட்டுமே. இஃது ஒரு சுற்றுக்கு – தன்னைத்தானே ஒருமுறை முடிக்க 88 தினங்களே எடுத்துக் கொள்கிறது. இது சூரியனை ஒருமுறைச் சுற்றி வரவும் அதே காலம் ஆகிறது. இக்கிரகம் பூமியை 116 நாட்களுக்கு ஒருமுறை தாண்டிச் செல்லுகிறது.

புதன் கிரகத்தின் பளு மிகக்குறைவானது. அதன் மேற்பரப்பின் ஈர்ப்பு சக்தியும் மிகக்குறைவானது. பூமியில் 100 பவுண்டு எடையுடைய ஒரு சிறுவன், புதன் கிரகத்தின் மேற்பரப்பில் 25 பவுண்டு எடையுள்ளவனாக மட்டுமே இருப்பான். பூமியில் 5 அடி உயரம் தாண்டக்கூடிய ஆள் புதனில் 15 அடி உயரம் தாண்டமுடியும். புதனில் இருந்திருக்கக்கூடிய காற்று மண்டலமும், இதன் ஈர்ப்பு சக்தியின் (Gravitation) குறைபாட்டால் நீண்ட காலத்திற்கு முன்னரே இதன் பிடியிலிருந்து நீங்கிச் சென்றிருக்க வேண்டும்.

புதனின் மேற்பரப்பு பூமியின் மேற்பரப்பில் ஏழில் ஒரு பங்கே ஆகும். பூமியின் நிலையில் இதன் நிலை இருப்பது மூன்றில்

ஒருபங்கு. இதனது திண்மைநிலை நீரின் திண்மையைவிட 4½ மடங்கு அதிகமாக உள்ளது. இதன் மேற்பரப்பில் கவர்ச்சி விசை பூமியின் மேற்பரப்பில் உள்ளதைப்போல் மூன்றில் ஒரு பங்கே உள்ளது.

புதன், கதிரவனைச் சுற்றி ஒரே வேகத்துடன் ஓடி வருவது இல்லை. சூரியனுக்குப் பக்கத்தில் புதன் இருக்கும்போது விநாடிக்கு 36 மைல் வேகத்தில் செல்கிறது. தூரத்தில் செல்லும் போது விநாடிக்கு இருப்பத்தாறு கல் வேகத்துடன் சுற்றி வருகிறது. புதனின் 'விடுபடு நேர் வேகம்' (Escape velocity) பூமியின் விடுபடு நேர் வேகத்தில் ஐந்தில் ஒருபங்கே ஆகும்.

இக்கோளானது மிகவும் சிறிதாக இருப்பதாலும் கதிரவனுக்குப் பக்கத்தில் இருப்பதாலும், இது பகலவனைக் கடுவேகத்துடன் சுற்றி ஓடிவருகிறது. இங்கு நாளும் ஆண்டும் ஒன்றே. இக்காரணத்தால் இக்கிரகம் சூரியனுக்கு ஒரு முகத்தையே காட்டிக்கொண்டு ஓடிவருகிறது. எனவே புதன் கிரகத்தில் ஒருபாதி என்றென்றும் பகலாக இருக்கும். மறுபாதி என்றும் இரவாகவே இருக்கும். இக்கிரகத்தில் கதிரவனை நோக்கிக்கொண்டுள்ள பகுதியில் எப்பொழுதும் சூரியவெப்பம் தாக்கிக்கொண்டே இருக்கும். இது கதிரவனுக்குப் பக்கத்தில் இருக்கும்போது 410°F வெப்பத்தையும், சேய்மையில் உள்ள போது 280°F வெப்பத்தையும் கொண்டுள்ளது. கதிரவன் குடும்பத்திலுள்ள கிரகங்களில் மிகவும் வெப்பம் பொருந்திய கோள் புதன் ஒன்றே எனலாம்.

புதனில் காற்று மண்டலமும் இல்லை – அதனால் அக்கிரகத்தில் நீரும் நின்று இருக்க வாய்ப்பு கிடையாது. ஆகவே நம் பூமியில் உள்ள உயிரினங்கள்போல அங்கு எதுவும் உயிர் வாழ முடியாது.

சந்திரனுக்கும் புதனுக்கும் பலப்பல ஒற்றுமைகள் உள. இரண்டும்எடையால்கிட்டத்தட்ட ஒன்றுகஇருக்கும். இரண்டும் ஒருபக்கத்தைக் காட்டிக்கொண்டே பகலவனைச் சுற்றுகின்றன. பகலவனது ஒளியை இரண்டும் சற்றேறத்தாழ ஒரேமுறையில் பிரதிபலிக்கின்றன. இரண்டிலும் காற்று மண்டலமும் நீர்ப் பசையும் இல்லை. இரண்டிற்கும் வளர்பிறை, தேய்பிறைத் தோற்றங்கள் உள்ளன.

— தொகுத்தளித்தவர்: சுவாமி வீரபாகு.

ஆதாரம் :

A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

பெருமிழலைக் குறும்பர், பேயார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 3—2—1985 ஆங்கிலமாசு முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப் பெற்ற கட்டுரை.]

அந்தநாள் குருவை வழிபட வாய்ப்பு மிக்கநாள்! முதல் ஞாயிறல்லவா! செஞ்சடைக்கற்றையும் திருவருள் நோக்கும் கொண்டு சிவமாகவே திகழும் குருமணிகளின் திருவார்த்தை கேட்கும்பேறு அன்று அன்பர்கட்குக் கிட்டுகிறதே!

அடியேனும் தருமைத் திருமடம் புகுந்தேன். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கோயிலுக்கு எழுந்தருளியிருந் தார்கள். அடியேன் வழக்கமபோலத் தூணிடை விளங்கும் சிற்பக்காட்சிகளைக் கண்டுகொண்டிருந்தேன்.

முகப்பில் நூலகத்தை அடுத்துக் குதிரை வீரர் சிற்பத்தூண். அத்தூணில் அமைந்தது தட்சிணமூர்த்தி சிற்பம். கல்லாலின் கீழிருந்து சனகாதியருக்கு உபதேசம் செய்கிறார். தென்முகக் கடவுளல்லவா! தெற்கு நோக்கிக் காட்சிதருகிறார். வலக்கால் மேல் இடக்கால் வைத்து அமர்ந்திருக்கிறார். நான்கு திருக் கரங்கள். வலப்புறம் ஒருகை அபயம் அளிக்கிறது. ஒருகையில் அரவு ஆடுகிறது. இடப்புறம் ஒருகையில் சுவடி; இன்னொரு கையில் தாமரைபோல் மழுவுளது. நூலணிந்த அழகியமார்பு கருணை முகம் – அந்தப்புடைப்புச் சிற்பத்தை ரசித்துக்கொண்டு இருந்தேன். அன்பர்கள் திருமடத்தினுள் செல்வதைக் கண்டேன்; அடியேனும் விரைந்தேன்.

குருமணிகள் திருநீறு அளித்துக் கொண்டிருந்தார்கள். தேவார இன்னிசை; திருவாசகச் சொற்பொழிவு; அடுத்துக் குருமணிகள் உபதேசித்தார்கள் – முதலில் மாசிமாதச்சிறப்பினை அருளிச்செய்தார்கள். சைவத்திற்குச் சிறப்புடையநாள் – மகா சிவராத்திரி இம்மாதம்வருகிறது சிவராத்திரி தேய்பிறை(கிருஷ்ண பட்சம்) 13 ஆம் நாள் – அதாவது திரயோதசியன்று மாலை

சதுர்த்தசிவரும். திரயோதசி அம்பாள் எனவும் சதுர்த்தசி சிவம் எனவும் கொள்ளவேண்டும். சக்தியும் சிவமும் சேரும் காலம். சிவராத்திரி வழிபாட்டில் அன்பர்கள் சிரத்தையுடன் கலந்து கொண்டு வழிபடவேண்டும்.

இங்ஙனம் அருளிய குருமணிகள் காலம் இடம்பற்றி — முந்தைய அருளுபதேசத்தில் அருளிய கருத்துக்களை அன்பர்கள் மனத்துக்குக் கொணர்ந்தார்கள். காலம் இடம்பற்றிய நிலையை, வரலாறு, புவியியல், என்ற முறையில் காணலாம். சரித்திரம் — ஒருகாலக் குறியீடு! பூகோளம் இடம்பற்றியது. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையன என்பதை விளக்கினார்கள்.

அடுத்து எல்லாப்பொருள்களும் சக்தியும் சிவமுமாய் விளங்குதலை நினைவுகூர்ந்தருளினார்கள். "பொருள்களிடையே வேற்றுமையுண்டு; அவை நமக்குத்தெரியவில்லை. வன்மையைச் சிவமாகவும் மென்மையைச் சக்தியாகவும் காணவேண்டும். திருநாவுக்கரசர் திருவையாற்றில் கயிலைக்காட்சி கண்டபோது எல்லாவற்றையும் அம்மையும் அப்பனுமாகவே கண்டார்."

குருமணிகள் பெருமிழலைக்குறும்பர் புராணச் சிந்தனையாக முதலில் குலம் குணம் என்னும் நிலையை ஆராய்ந்தார்கள். குலம் தனிச் சிறப்புடையது. குணம் அதற்கு அடிப்படையாக அமைவது. "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்" என்ற வள்ளுவர் குறள் இதற்குச் சான்று.

பெருமிழலைக்குறும்பர் குறுநில மன்னர் குடியிற் பிறந்தவர்; அன்பு, நிறை, பொறுமை வாய்க்கப் பெற்றவர். முன்பிறவித் தொடர்ச்சியால் நல்லறிவு பண்பு முதலியன வாய்க்கப்பெற்றிருந்தார். குறும்பர் என்னும்சொல் குறும்பு என்னும் வேரினின்று பிறந்தது. குறும்பு — குறுநிலம். குறுநிலம் — பெருநிலத்தின் பகுதி என விளக்கி ஒருதத்துவச் சிந்தனையை அருளினார்கள். ஐம்பொறி புலன்கள் குறுநிலங்கள். இவற்றினை நெறிப்படுத்திப் பெருநிலம் அடைந்தவர் பெருமிழலைக்குறும்பர் என்றுகுருநாதர் அருளியபோது கருத்துச்செறிவில் ஆழ்ந்தோம்.

பெருமிழலைக்குறும்பர் சுந்தரர் பெருமை உணர்ந்தவர்; அவரிடம் பக்திகொண்டவர்; சுந்தரரைத் தியானித்து அஷ்டமா சித்திகளும் கைவரப்பெற்றவர்.

சுந்தரர், பரவைபால் இறைவனை ஒருமுறைக்கு இருமுறை தூது அனுப்பியமைக்காக அவரிடம் கோபம்கொண்டு அவரை

வெறுத்தவர் ஏயர்கோன்கலிக்காமர்; பின் சுந்தரர்பால் அன்பு கொள்ளுமாறு இறைவன் ஆட்கொண்டான். சுந்தரரைப்பாராமலே அவரிடம் அன்புகொண்டவர் பெருமிழலைக்குறும்பர். இச்செய்தியையும் இங்கு ஒப்புநோக்கிப் பார்க்கவேண்டும்.

சுந்தரர் நாளை கயிலாயம் சேரப்போகிறார் என்பதை யோக நெறியால் அறிந்து முதல்நாளே தம்யோக நெறியால் காற்றைப் பிரமந்திரத்தின் மூலம் (தலையோட்டின் மூலம்) வெளியேற்றினார்; கயிலாயம்சேர்ந்து அங்குச் சுந்தரரை வழிபட்டார்-இப்புராணச் சிந்தனையின் நிறைவாக "ஆசாரியர்களைத் தெய்வமாகவேகருதி வழிபட்டால் யோகநிலை கைகூடும்; எல்லாச் சக்திகளும் கிடைக்கும்" என அருளிச் செய்தமை மிகச் சிறப்பான உபதேசமாக அமைந்தது.

"பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்" எனச் சுந்தரர் அருளிய அடிப்படையில் பேயார் ஆகிய காரைக்காலம்மையார் வரலாற்றையும் தத்துவநோக்குடன் அருளிச் செய்தார்கள். காரைக்காலம்மையார் புராணத்தொடக்கத்தில் சேக்கிழார்ஊர்வளம் இயம்புகிறார் அதன் மூலம் அம்மையார் வரலாற்றை இறைச்சியாக விளக்குகிறார்.

'சங்கு வளரும் ஊர்' சங்குதசைப்பொதியோடு கூடியது. நாற்றமுடையது. தசைப்பொதியோடு கூடியபோது சிறப்பில்லை; தசைநீங்கிய ஒளியொடுகூடியசங்கு சிறப்புடையது! புனிதமானது! நாம் சிந்திக்கிறோம், என்ன தொடர்பு என்று! தசைப்பொதி நீங்கிய அம்மையார் அருள் நிலையை அல்லவா இதுகாட்டுகிறது-மகிழ்கிறோம்; சேக்கிழாரின்செய்ய தமிழுக்குச் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்!

காரைக்கால்; வணிகர்குலம்; தனதத்தர் செய்த புண்ணியப் பயனைப் புனிதவதியார் அவதரித்தார். புனிதவதியார் தளர் நடைப் பருவத்திலும், மழலைப்பருவத்திலும் சிவசிந்தனை உடையவராகத்திகழ்ந்தார். இவர் இல் இகவாப்பருவம் உற்றார். நாகைப்பட்டினத்தில் பெரும் புகழ் பெற்ற வணிகர் நிதிபதியார். அவர், தம்மகனார் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணம் பேசும்பொருட்டுப் பெரியோரை அனுப்பிப் பேசுவித்தார். பெரியோர் விருப்பப்படியே-தனதத்தரும் மகள்தர இசைந்தார். தனதத்தன் வேத விதிப்படி திருமணம் செய்வித்தார். சேக்கிழார் இப்பகுதியை, மயில்போன்ற புனிதவதியாரைக் காளைபோன்ற பரமதத்தனுக்குத் திருமணம் செய்வித்தார்கள்

என விளக்கினர். ஒன்றனுக்கு ஒன்று பொருத்தமின்மையைச் சுட்டுவது இது என்ற குறிப்பை உணர்த்திப் பின்னிகழ்வுகட்கு முன்னமைப்பாக விளங்குதலைச் சுட்டினர்கள்.

புனிதவதியைப் பிரியமனமில்லாத தனதத்தனர் காரைக்காலிலேயே அழகிய கணவரோடுவாழ அமைவுசெய்தார். இனிய வாழ்க்கை! சிவனடியார் போற்றும் உயர்பாங்கு! ஒருநாள் ... பரமதத்தனை வாணிபநிமித்தம் காணவந்த ஒருவர் இருமாங்கனிகளைக் கொணர்ந்து அளித்தார். அக்கனிகளைப் பரமதத்தன் இல்லம் சேர்ப்பித்தார். அப்போது பசிமிகுந்த சிவனடியார் ஒருவர் புனிதவதியார் இல்லம் நோக்கிவந்தார். புனிதவதியார் அவர் பசிநிலைகண்டார்; அமுதளிக்க விரும்பினர். கறிஒன்றும் சமைக்கவில்லை; திருவமுது மட்டும் சமைக்கப்பட்டிருந்தது. அடியாரை அமர்வித்துத் திருவமுதுபடைத்தார்; மாங்கனிகள் இரண்டனுள் ஒன்றைஇட்டு மகிழ்ந்து அவரை அனுப்பினர்.

நடுப்பகல். பரமதத்தனர் இல்லம் வந்தார். நீராடி உணவு உண்ண அமர்ந்தார். முறைப்படி அம்மையார் உணவுபடைத்தார். மாங்கனியும் இட்டார். உண்டார் பரமதத்தர். கனி சுவையாய் இருந்தது. தாம் அனுப்பிய மற்றொரு கனியையும் இடுகஎன்றார். அம்மையார் உள்ளேசென்றார். மனம்தளர்ந்தார். கனிக்கு என்ன செய்வது ? இறைவன் திருவடிகளை எண்ணித் துதித்தார். திருவருள் துணைசெய்தது. அதிமதுரக் கனிகையில் வந்துசேர்ந்தது; கணவனர் உண்காலத்தில் இட்டார். சுவைத்து உண்டார் பரமதத்தர். "மூவுலகினும் பெறுதற்கரிய இக்கனி நான் கொடுத்தனுப்பியது அன்று: இதனை எங்ஙனம்பெற்றாய்?" என வினவினர். அடியார்க்கு இறைவன் அருளும் திறத்தைக் கூறுதலும் இயலாது; கணவனர்உரையைக்காவாது இருத்தலும் உரியதன்று. என்செய்வார்! நிகழ்ந்தமை கூறினர்.

"ஈசன் அருளால் கனி கிடைத்திருக்குமாயின் இன்னொரு கனி அழைத்துத்தருக" என்றார்பரமதத்தர். "ஈங்கு இது அளித்தருளீரேல் என்னுரை பொய்யாம்" என்று வேண்டினர் புனிதவதியார். கனிகிடைக்கப்பெற்றார். அதனைக் கணவன் கையில் கொடுத்தார். பரமதத்தனும் அதிசயித்து அதனை வாங்கினன். ஆனல் திடீரென அக்கனிமறைந்தது. இறையருளை மிக்குச் சோதித்தமையின் பயனல்லவா இது !

பரமதத்தன் மனம் தடுமாறினன்; "புனிதவதியார் மானுடப் பிறவியாகார்; அவர் தெய்வப்பிறவி" எனத் துணிந்தான். அதனை எவர்க்கும் கூறுமல் பிரிந்துவாழத் தலைப்பட்டான்.

பிரிந்துவாழ எண்ணிய பரமதத்தன், வேற்றுநாடு எய்திப் பொருள் திரட்டிச் சிலகாலம் சென்று பாண்டியநாட்டில் ஒரு துறைமுகப்பட்டினத்தை அடைந்தான்; வேறுதிருமணம்செய்து கொண்டான்; பெண்மகவும் பிறந்தது. மகளுக்குப் 'புனிதவதி' என்று பெயர் இட்டான்.

புனிதவதியாரின் உறவினர் இச்செய்தி கேள்வியுற்றனர்; புனிதவதியாரைப் பரமதத்தனிடம் கொண்டுவிட எண்ணினர்; புறப்பட்டனர். செய்தியறிந்தார் பரமதத்தர். தம் இரண்டாம் மனைவியோடும் மகளோடும் ஊர் எல்லையில் காத்திருந்தார். புனிதவதியாரும் உறவினருடன் அங்குவந்துற்றார். பரமதத்தர் தன் குடும்பத்தினருடன் புனிதவதியார்திருவடிகளில் விழுந்தார். அங்கிருந்தோர் "உன்மனைவியை நீ வணங்கக் காரணம்யாது?" என வினவினர். "இவர் மனிதப்பிறவியல்லர்; தெய்வம்" எனக் கூறினன். சுற்றத்தார் மருண்டனர்; புனிதவதியார் இறைவன் திருவடிகளைச் சிந்தித்தார்.

குருமணிகள் இப்பகுதியை விவரித்தார்கள். "எம்மைத் தீண்டப் பெறுதிரேல் திருநீலகண்டம்" என்ற திருநீலகண்டக் குயவனார் மனைவியும் திருநீலகண்டரும் வழக்குவரை அந் நிகழ்ச்சி பற்றி வெளிப்படுத்தாமை போலவே, புனிதவதியாரும் சுற்றத்தார் திகைத்தபோதும் மாங்கனி தொடர்பாக எழுந்த நிகழ்ச்சியை வெளிப்படுத்தவில்லை; — இந்த இனிய ஒப்பீடு இல்லற தருமத்தை நமக்குக் கற்றுத்தந்தது!

பரமதத்தன் சொல்கேட்ட காரைக்காலம்மையார் இறையருளைச் சிந்தித்தார்; அழகும் இளமையும் தரும் தசைப் பொதி நீங்க வேண்டினர்; தலயாத்திரைக்கு அது சரியன்று எனக் கருதினர். இளமை தரும் தசைப்பொதி நீங்கி இறையருளால் முதுமைக்கோலம் காட்டும் எலும்பு வடிவம் எய்தினர். தசைப்பொதியோடு யாத்திரை முதலியன மேற்கொள்ளும் போது பிறர் நெஞ்சில் தவறான எண்ணங்கள் தோன்றக்கூடும். எனவே பேய்வடிவுபெற்றார் அம்மையார். இங்ஙனம் பிறர்மனம் சிறக்கவாழும் பெருந்தகைமை பெரியபுராணம் நமக்குக்கற்றுத் தரும் பாடம்; பண்பாடு; சைவத்தின் கலாசாரம்! அழகிய வடிவோடு, சுதமதி துணையோடு மலர்க்காய்ய உவவனம் சென்றாள் மணிமேகலை! உதயகுமரன் கண்டான். மையல் அவன்மனத்தைக் கவ்வியது! விளைவுகளை மணிமேகலைக் காப்பியம் பேசுகிறது — இத்தகுநிலை தோன்றலாகாது என்பது அம்மையார் காட்டிய நன்னெறி!

மற்றொரு ஒப்பீடு; ஔவை சமுதாயப்பணிகள் ஆற்றினர்; தூதுசென்றார். ஊன் பொதி உடல் கூடாது எனக்கருதி முருகன் அருளால் முதுமை வடிவம் கொண்டார் என்கிறது வரலாறு — சமுதாயத்தொண்டு புரிய முதுமை பெற்றார் ஔவையார். சமயத்தொண்டு புரிய என்பு வடிவம் பெற்றார் காரைக்கால் அம்மையார்.

மேலும் ஓர் ஆய்வு! திலகவதியாரும் இளமையானவரே! தொண்டுபுரிந்த அவர் மனைத்தவம் மேற்கொண்டார் — புனிதவதியார் யாத்திரை மேற்கொண்டு தொண்டுபுரிந்தாராகையால் தசைப்பொதி நீங்கவேண்டும் என வேண்டினார். "தம்மால் பிறர்மனம் பிறழலாகாது" என்ற உயர்ந்த சிந்தனை — பண்பாடு நம் கற்க வேண்டிய சிறந்த பாடம். குருநாதரின் இந்த இனிய விளக்கங்கள் நம்மை உயர்நெறிக்குச் செலுத்தும் ஒப்பற்ற உபதேசங்கள்!

பேயாராகியபுனிதவதியார்கயிலாயம் புறப்பட்டுமனோவேகத்தில்சென்றார். கயிலாய மலைப்பகுதி அடைந்தார்; சிவபெருமான் உமையம்மையோடு எழுந்தருளியிருக்கும் கயிலாயத்தைக் காலால் மிதிக்கக்கூடாது எனக்கருதிய பேயார் தலையால் நடந்து சென்றார் காரைக்காலம்மையார் கயிலாயத்தைக் காலால் மிதிக்கக்கூடாது என எண்ணியமை போலவே, ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர், அருளாளர் அவதாரத்தலங்களையும் அருள்பெற்ற தலங்களையும் மிதித்தற் கஞ்சியமையைக் குறிப்பிட்டமை சிறந்தஒப்பீட்டாய்வாக அமைந்தது.

பேயார் தலையால் நடந்துவருநிலைக்கண்டார் உமையம்மை; அவர் அன்பினை வியந்தார்; பேயாரும் கயிலாயம் நண்ணினார். பெருமான் 'அம்மையே' என்றார். பேயார் 'அப்பா' என்றார், பெருமான் திருவடிகளில் வீழ்ந்துவணங்கினார். இங்கு நம்மிடத்து வேண்டும் வரம் யாது எனப் பெருமான் அருள, "இறவாத இன்ப அன்பும், பிறவாமையும், பிறப்புண்டேல் மறவாமையும், பெருமான் ஆடும்போது அடியின் கீழிருக்கும் பேறும்" வேண்டினார். பெருமான் அருள்செய்தார் 'தென்திசைத் திருவாலங்காட்டில் நாம் ஆடும் பெருநடனம் கண்டு ஆனந்தத்துடன் நம்மைப்பாடிக் கொண்டிருக்க" எனப்பணித்தார். அம்மையார் அங்குநின்றும் மீண்டு திருவாலங்காட்டைத் தலையால் நடந்து அடைந்து வழிபட்டிருந்தார்.

பெருவரம் பெற்ற அம்மையார் அங்குக் 'கொங்கை திரங்கி' எனத்தொடங்கும் மூத்த திருப்பதிகம் பாடினார். இது நட்ட

பாடைப் பண் அமைந்தது. "எட்டியிலவம்" என்னும் பதிகம் இந்தளப் பண் பொருந்தியது முதன் முதலில் பதிகம் பாடியமையால் இது மூத்த திருப்பதிகம் ஆயிற்று எனவும் பண் இரண்டைப்பாடிப்பரவுதலும் பதிகம் எனும் அமைப்பில் பாடிப் பரவுதலும் காரைக்காலம்மையார் வாயிலாகப் பின் வந்த அருளாளர் பெற்றவை எனவும் அருளினர்கள். நல்ல குடும்பம் நடத்தியமை, வழிபாடாற்றல், முதல் குருவாக விளங்கியமை முதலியவற்றால் நம்மை வழிப்படுத்தியவர் அம்மையார் எனத் தொகுத்தும் வகுத்தும் உரைத்தபோது குருநாதரின் பகுப்பாய்வு நெறி பளிச்சிட்டது.

அம்மையார் பாடல்களுக்கும் விளக்கம் அருளினர்கள். அவர்கள் விளக்கம் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழும்! "இறைவனை வணங்குகிறோம்; அவர் நம் துன்பம் தீர்க்கவில்லை என்றால் வழிபாட்டை விட்டு விடலாமா? – இது சமுதாயச் சிந்தனை. துன்பம் வினைப்பயன். பக்குவம் ஏற்படும் போதுதான் இறைவன் அருளுவான். என்று பக்குவம் வருகிறதோ அதுவரை கடமையைச் செய்ய வேண்டும்" – இப்படி உபதேசித்து இக்கருத்துக்களின் உள்ளடக்கமாகக் கொண்ட பாடலைச் சுட்டினர்கள். அது,

" இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் — சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு "

என்ற அற்புதத் திருவந்தாதிப்பாடல். இதில் 'இடர்களையா ரேனும் அன்பறாது' என்ற பகுதியை விளக்கியபோது அன்பர்களின் கண்கள் பனித்தன!

உலகியலும் சமுதாயநோக்கும் சமயநோக்கும் பின்னிப் பிணைந்த அருளுபதேசம் அன்பர்கட்கு ஆயிரமாயிரம்பயன்களைத் தந்தன! பேறுபெற்றோம். வாழ்த்துடன் உபதேசம்நிறைந்தது. கனிச்சாறு பருகினோம். இல்லம் திரும்பினோம்.

அம்மையருள் திறமுரைத்த
அருட்குருவின் தாள் வாழ்க!

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவாரப்பாடல்பெற்ற தலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன. 5—2—85 செவ்வாய்க் கிழமையன்று திருத்துறையூர் அருள்மிகு சிஷ்ட குருநாத சுவாமி திருக்கோயிலிலும் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் குருமூர்த்த ஆலயத்திலும் வழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப் பாராயணமும் நிகழ்ந்தன. 'திருத்துறையூர்த் திருப்பதிகம்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. தருமையாதீனத்தமிழ்ப்புலவர் வித்துவான். திரு வி. சா குருசாமி தேசிகர், எம். ஏ., 'சுந்தரர் செந்தமிழ்' பற்றியும் திருவதிகை, வித்துவான் திரு. ந சண்முகசுந்தர தேசிகர் 'அருணந்தி சிவம்' பற்றியும் உரையாற்றினர். அன்பர்கள் பலர் வழிபாட்டிற் கலந்து கொண்டும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. 3—3—85 அன்று 45-ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் வழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துத் தருமையாதீன தேவஸ்தானம் கண்காணிப்பாளர் திரு டி என். அருணாசலம் பி. ஏ. பி. எல் அவர்கள் திருவாசகத்தில் திருச்சதகம் 'புகுவதாவதும்' என்னும் பாடற்கும் நீத்தல் விண்ணப்பத்தில் 'கடையவனேனை' எனத்தொடங்கும் பாடற்கும் விளக்கம் அளித்தார்கள். ஆகாயத்தில் ஆறுகள் உண்டு என்பதை ரஷ்ய விஞ்ஞானியின் கட்டுரை கொண்டு விளக்கினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக அப்பூதியடிகள் புராணத்தை நகைச்சுவைதோன்ற உலகியல் எடுத்துக்காட்டுக்கள் கொண்டு தத்துவச்செறிவோடு உபதேசித்தார்கள். திருமூலர் "நின்றனன் மூன்றனுள்" என்றது குரு, லிங்க, சங்கம வழிபாடுகளை என அருளி இம்மூன்றும் இறையருள் பெற உதவும் பான்மையை விளக்கினர்கள்.

அப்பூதியடிகள் குருவருள் துணை கொண்டமையைப் பெரிய புராணப் பாடல்கள் வாயிலாக விவரித்தார்கள். "தாண்டவம் புரியவல்லதம்பிரானுருக்கு அன்பர்" என்றதொடரில்தாண்டவம் என்பது பஞ்சக் கிருத்திய பரமானந்த தாண்டவம் என்பதைச் சாத்திரம்கொண்டும் தம்பிரான்என்பதில்தம்என்பது உயிர்களைச் சுட்டும் சொல் என்பதைத் தக்க சான்றுகள் கொண்டும் விளக்கம் அருளினர்கள். திருக்குறள், திருமுறைகள், புராணங்கள். முதலிய மேற்கோள்களுடன் அப்பூதியடிகள் புராணத்தை ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் உபதேசித்தமை சிந்தைக்கும் செவிக்கும் இனிமை பயப்பதாய் அமைந்திருந்தது

மயிலாடுதுறை அன்பர்களும் பக்தர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அடுத்து 7--4—85 அன்று 46-ஆம் அருளுபதேசம் நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுக.

திருக்குவளையில் நெல் மகோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 4—3—85 முதல் 8—3—85 வரை நெல் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கோளிலிப்பதியில் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஆலயத்தில் ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க் கிழார் தந்தருளிய நெல்மலையைச் சுவாமிகள் ஆருருக்கு அட்டித்தருமாறு ஆளிட வேண்டிக் கொண்டபடி இறைவன் ஆணையால் பூதங்கள் எடுத்துச் சென்றது முதலிய அற்புத வைபவங்கள் இம்மகோற்சவத்தில் நடைபெற்றன. 7—3—85 வியாழனன்று நெல்மலையை ஆரூருக்குச் சேர்ப்பிக்க இறைவன் கட்டளையிடும் உற்சவம் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயனுற்றனர்.

நாயன்மார் குருபூஜைத் திருநாட்கள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் தைத்திங்கள் சதயநாளில் (23—1—85) அப்பூதியடிகள் நாயனர், ரேவதி நாளில் (27—1—85) கலிக்கம்ப நாயனர், திருவாதிரைநாளில் (2—2—85) அரிவாட்டாயநாயனர் உத்திரநாளில் (8—2—85) சண்டேசர், திலகவதியார் மாசித் திங்கள் பூராடநாளில்(16-2-85) காரிநாயனர், சதயநாளில்(20-2-85) கோச்செங்கட் சோழர், அஸ்தநாளில் (8-3-85) எறிபத்த நாயனர் குருபூசைத் திருநாட்கள் சிறப்பாக நிகழ்வுற்றன. ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., புராணம்

வாசித்து வரலாறு கூறினர். ஆதீன வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும், அன்பர்களும் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் இரண்டாம் கருத்தரங்கம்

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் பெருங்கருணைத் திறத்தால் உருவாகிக் குருமணிகளின் அருளாசியுடன் வளர்ந்துவரும் அனைத்துலகச் சைவ சித்தாந்த ஆராய்ச்சிநிறுவனத்தின் இரண்டாம் கருத்தரங்கம் 16, 17-2-85 சனி ஞாயிறு ஆகிய இருதினங்களிலும் தருமையாதீனம் பல்கலைக்கல்லூரி வழிபாட்டு மன்றத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சைவ சித்தாந்த சாத்திரம் பண்டாரசாத்திரம் முதலிய நூல்களில் 'பசுக்கொள்கை' பாங்குறப் பகரப்பெற்றுள்ளமை குறித்து ஆய்வாளர்கள் கட்டுரைகள் வாசித்தனர்.

16—2—85 சனிக்கிழமையன்று காலை கருத்தரங்கின் முதல் அமர்வு டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையிலும், பிற்பகல் இரண்டாம் அமர்வு வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் தலைமையிலும், 17—2—85 ஞாயிறன்று காலை மூன்றும் அமர்வு டாக்டர் திரு. அ. சாமிஐயா அவர்கள் தலைமையிலும், பிற்பகல் நான்காம் அமர்வு திரு. T. N. அருணாசலம் பி.ஏ.,பி.எல். அவர்கள் தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றன.

ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் திரு. ஏ. வி. ஜயச்சந்திரன் அவர்கள் ஒவ்வோர் அமர்வின் போதும் வரவேற்புரை நன்றியுரை கூறினர். நிறுவனத்தின் நோக்கங்கள், இலக்குகள்பற்றித் தம்உரைகளின் இடையேதெளிவுபடுத்தினர்.

முதல் நாள் முதல் அமர்வில் வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம், வித்துவான் திருமதி ப. நீலா, எம். ஏ. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ. ஆகியோர் ஆய்வுக்கட்டுரை வழங்கினர். இரண்டாம் அமர்வில் வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ. திருமதி. மீரா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினர்.

இரண்டாம் நாளின் மூன்றும் அமர்வில் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் தம் ஆய்வுக்கட்டுரையை வழங்கிய பின் டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்களின் ஆய்வுக் கட்டுரை வாசிக்கப்பட்டது. நான்காம் அமர்வின் போது வித்துவான் திரு. மு. சுந்தரேசம்பிள்ளை தம் ஆய்வுக்கட்டுரையை வாசித்தார். இயக்குனர் நன்றிகூற கருத்தரங்கு இனிது நிறைவுற்றது.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இரக்தாக்ஷிஞு பங்குனிமீ 1௳ முதல் 30௳ முடிய)

(14—3—1985 முதல் 12—4—1985 முடிய)

இரக்தாக்ஷிஞு பங்குனிமீ 1௳ குருவாரம் மூலநக்ஷத்திரம் கௌலவகரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 9 நாழிகை 45 வினடிக்கு ரிஷபலக்கினதில் உலகரட்சகரான சூரிய பகவான் கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரமணமாக பங்குனி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று ஷடசீதிபுண்ணிய காலம். பங்குனிமீ 9௳ சுக்கிரவாரம் சாந்திரமானவருஷாரம்பம். இந்த சாந்திரமான வருஷாதிபதி சுக்கிரபகவான் கலியுகம் 5086 சௌரமான குரோதன வருஷத்துக்கு இராஜாவாகின்றார். அவர் குரோதன வருஷத்துக்கு மற்றமந்திரி முதலான அதிபதிகளை வானமண்டலத்தில் ஏற்படுத்தி உலகத்தை இரட்சிப்பவரா கின்றார். இம்மாத கிரகஸ்திதியின் பலன் லோகத்திற்கு நல்லன ஏற்படும். தேசங்களில் ஆன்றோர்களால் தர்மங்கள் சிவ கைங்கர்யங்கள், ஆலயத் திருப்பணிகள், நீடித்திருக்கின்ற தர்ம மாகக் கட்டிட நிர்மாணப் பணிகள் வெகுவாக நடந்து கொண்டிருக்கும். தேசங்களில் அரசர்கள் ஜனாதிபதிகள் செங் கோல் ஆட்சி நடத்தி மக்களை இரட்சிப்பார்கள்.

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரனருளில் வந்து சிவசமய கர்த்தாக்களாக விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் உலகத்துக்கு நீதி உரைகள் தத்துவார்த்தங்கள் தம் திருவாய் மலர்ந்து இயம்பி அருளிச்செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் ஆறுகால பூசைகள் நடைபெறும். விசேஷ உத்ஸவ வைபவங்கள் க்ஷேத்திரங்களின் ஆலய ஐதீகவழியில் சிறப்பாக நடைபெறும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். தன வருமானங்கள் வந்து நிறையும். அரசகாரியங்களில் பொது நலன்களில் செலவும் ஏற்படும். ஏப்ரல் முதலில் சில நற்சம்பவங்கள் நிகழும். தெய்வதரிசனம் செய்தல் புனிதஸ்தலம் சென்றுவருதல் ஆகும். வாகனசுகம் திருப்தியளிக்கும். இலட்சியப் போக்கில் எல்லாக்காரியங்களையும் நடத்திக்கொண்டிருக்கும். ஏப்ரல் 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். பண வருமானம் இராஜகண்யத்தில் வெகுவாகவந்துசேரும். வஸ்திர பூஷணம் தரும். வீடு வாகன பிராப்தியில் நல்ல ஏற்பாடு நடந்து கொண்டிருக்கும். தாரப்புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் நல்லவிதமாக நடந்துவரும். மார்ச்சு 14, 15 ஏப்ரல் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானங்கள் மூன்று விதங்களில் வந்து சேரும். பொன் பொருள் வாங்குதல் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சிறப்புதரும். எழுத்து மூல காரியங்கள் அரசாங்க அலுவல்கள் கெடியாக நடந்துவரும். சகோதரர் புத்திரர் புத்திரிகளுக்கு நற்காரியங்கள் நடக்கும். மார்ச்சு 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். பண வருமானங்கள் கண்யத்திற்கு ஏற்ப வந்து நிறையும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ் உண்டாகும். மார்ச்சு 31 தேதி அளவில் நவீனவாகனம் தரும். இயந்திரசாதனங்களில் நல்லவைவரும். எல்லாக்காரியங்களும்குறிப்பிட்டபடிகெடியாக நடந்துகொண்டிருக்கும். மார்ச்சு 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷபயன் தரும். பெற்ருேரின் உடல்

நலம் பாதித்துக் குணமாகும். புத்திரனுக்கு நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களும் தெய்வானுகூலத்தில் நல்ல விதமாக நடந்துகொண்டிருக்கும். மார்ச்சு 21, 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். தனவருமானம் வரும். அவசிய செலவுகளும் ஏற்படும். சகோதரருக்கு நன்மை உண்டாகும், இராசிக்கு ஓர் விபத்து வந்து தப்பும். வீடு மனைகளில் மாறுதல் சம்பவிக்கும். ஜீவனோபாயத்தில் ஏப்ரல் முதலில் ஓர் ஆதாரம் நல்கும். தாராபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். பணவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். ஒப்பந்தம் பத்திர லிகிதங்களில் விசேஷ நற்பலன் தரும். அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தும். புத்திரர் அல்லது புத்திரியால் உள்ள கிலேசம் நிவர்த்தியாகும் எல்லாக்காரியங்களும் புத்தி சாதுரியத்தினால் நன்முறையில் நடந்துவரும். மார்ச்சு 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். தனவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரர் பெற்றோர் நலன்களில் பொருட்செலவும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும், வாகனம் வீடுகளில் மனைவிவழி பொருளாதாரங்களில் ஏப்ரல் முதல் நல்லன ஏற்படச்செய்யும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்யவயிற்றில் அழற்சிபோன்றநலிவுநீங்கும்.எல்லாக்காரியங்களும் நன்முறையில் நடந்துகொண்டிருக்கும். மார்ச்சு 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும் பணவருமானம்வரும். சகோதரருக்கு உயர்வுதரும். நவீன பொருள்கள் வாங்குதல் ஆகும். நல்ல வாகனம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். எல்லா அலுவல்களும் மனோலயப்படி நன்கு நடந்து வரும். மார்ச்சு 31, ஏப்ரல் 1 இத் தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தனவருமானம் வெகுவாக வரும். இரத்தின பூஷணம் வாங்குதல் ஆகும். அரசாங்கத்திலிருந்து நன்மைகள் ஏற்படச்செய்யும். நவீன சாதனங்களில் பிரயோஜனம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எல்லாக் காரியங்களும் சமயோசித புத்தியில் நல்லவிதமாக நடக்கும். ஏப்ரல் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம்–பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானங்கள் கண்ய ஸ்திதியில் வந்துகொண்டிருக்கும். சுப காரியங்கள் தெய்வ கைங்கர்யங்கள் செய்தல் ஆகும். ஏப்ரல் 4, 5, தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுகநடக்கும். பண வருமானம் கெடியான தோரணேக்கு ஏற்பவரும். அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஏப்ரல் 2 ஆம் தேதி ஆனல் ஓர் திரண்டபொருள் கைக்குவரும்.நவீன சாதனம் அனுபோகம் தரும். சௌகரியங்களே ஏற்படுத்தும் தாரம் புத்திரர் பௌத்திரர்களால் மகிழ்ச்சி நிலவும். ஏப்ரல் 6, 7 தேதி கள் சந்திராடஷ்மம். புதன் வியாழன் சுபம்.

பிறர் செய்த தீமைக்குப்பிரதி, அவரைப்போல நாமும் செய்யாதிருத்தலே.

முடியாதது என்று ஒரு காரியமும் கிடையாது. மற்றொருவனுக்கு அக்காரியம் செய்ய முடியு மென்ருல் அக்காரியம் உன்னல் ஏன் செய்ய முடியாது?

— ரோமானிய சக்கரவர்த்தி
மார்க்கஸ் அரேலியஸ்

இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி: பாடம் – 2.

உபநிடதம்

வேதாந்தம் :

வேதவியாசர் வேதங்களைப் பிரித்தபோது நான்கு வேதங்களுக்குமாக மொத்தம் 1131 சாகைகள் இருந்தன. ஆனால் தற்போது அவைகளில் ஏழு சாகைகளே ஓதப்படுகின்றன. அதாவது சாகைகளின் உட்பிரிவுகளான மந்திரம் எனப்படும் ஸம்ஹிதை, பிராம்ஹணம், ஆரண்யகம் இவை ஏழு சாகைகளுக்கு மட்டுமே பூர்த்தியாகக் கிடைக்கின்றன. மந்திரம் கிடைப்பது ஏழு சாகைகளுக்குத்தான். பிராம்ஹணங்கள் ஆரண்யகங்கள் கொஞ்சம் அதிகமாகக்கிடைக்கின்றன. ஆரண்யகத்தில் உள்ள உபநிடதம் நூற்றுக்கும் அதிகமாகக் கிடைக்கின்றன.

சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்பு காஞ்சீபுரத்தில் வாழ்ந்த உபநிஷத் பிரம்ஹேந்திரர் என்ற துறவி 108 உபநிடதங்களைச் சேகரித்து அவைகளுக்கு பாஷியமும் (பேருரை) செய்திருக்கிறார்.

ஒவ்வொரு சாகையிலும் முடிவில் உள்ளது உபநிடதம் என்று முன்பே சொன்னோம். அந்தம் என்றால் முடிவு அல்லவா? ஆகவே உபநிடதத்திற்கு வேதாந்தம் என்று பெயர். அந்தம் என்றால் முடிபு – முடிவான கருத்து – என்றும் பொருள். கர்ம காண்டத்தில் சொல்லப்பட்ட நற்கருமங்களைச் சுயநலமின்றிச் செய்து மனத்தூய்மை பெற்று ஆரண்யகத்தில் விவரிக்கப் பட்டுள்ள தியான முறைகளைச் செய்து ஒருமைப்பட்ட மனத்தினராகிப் பெறவேண்டிய கடவுள் – தத்துவ அனுபவத்தையல்லவா விளக்குகிறது உபநிடதம்! ஆகையால் அது வேதத்தின் முடிபு – வேதாந்தம் – ஆகிறது.

உபநிஷத் என்ற சொல்லே உபநிஷதம், உபநிடதம் என்று ஆகியிருக்கிறது. கடவுளுக்குச் சமீபத்தில் கொண்டு சேர்த்தல், அறியாமையை அழித்தல் என்ற பொருள்களில் பிறந்தது உபநிஷத் என்ற சொல்.

உபநிடதம் கடவுள் தத்துவத்தை "பிரம்ஹம்" என்ற சொல்லினுல் சொல்லும். எங்கும் நிறைந்தது என்பது அதன் பொருள்.

பத்து உபநிடதங்கள் :

உபநிடதங்களுக்கு முதன் முதல் உரை எழுதிய பெருமை சங்கரரைச்சாரும். அவர் ஈசாவாஸ்ய–கேன–கட–பிரச்ன–முண்டக-மாண்டுக்ய-தைத்திரீய–ஐதரேய–சாந்தோக்ய–பிருஹதாரண்யக என்ற பத்து உபநிடதங்களைத் தேர்ந்து எடுத்து பாஷியமும் இயற்றினர். பின்பு வந்த ராமானுஜரும் மத்வரும் இந்தப் பத்து உபநிடதங்களுக்குத் தங்கள் சித்தாந்தத்திற்கு ஏற்ப பாஷியங்கள் இயற்றியிருக்கிருர்கள்.

1. ஈசாவாஸ்ய உபநிடதம் :

சுக்ல யஜுர் வேதத்தைச் சார்ந்தது இந்த உபநிடதம். 18 மந்திரங்கள் கொண்ட சிறிய நூலாயினும் கருத்துச் செறிவு கொண்டது. முதல் மந்திரம் ஈசாவாஸ்யம் என்று ஆரம்பமாவதால் இதற்கு ஈசாவாஸ்ய உபநிடதம் என்று பெயர். இந்த உபநிடதம் மகாத்மா காந்தியடிகளால் மகத்தானதாகக் கருதப்பட்டது.

"நீக்கமற எங்கும் நிறைந்த பரம்பொருளுக்கல்லவா உலகத்துப் பொருள் அனைத்தும் சொந்தம். தனக்கு இந்தப் பொருள் சொந்தமானது. பிறருக்குச் சொந்தமான இந்தப் பொருள் தன்னுடையதாக ஆகவேண்டும் என்று எண்ணுவது எவ்வளவுபேதமை? தனக்கென்று எதுவும் இல்லை. வேண்டவும் வேண்டாம் என்ற தியாக மனப்பான்மையையல்லவா பெற வேண்டும்!" என்கிறது முதல் மந்திரம்.

"நூறு வயது வாழவேண்டும். ஆனுல் கடைசி மூச்சுவரை பற்றில்லாமல் உழைக்கவேண்டும்" என்கிறது இரண்டாவது மந்திரம்.

நல்வினைப்பயனுன செல்வம்முதலியவை நல்வழியிலேயே நமக்குக் கிடைக்கவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் நிறைவு பெறுகிறது இந்த உபநிடதம்.

2. கேன உபநிடதம் :

இது ஸாமவேதத்தின் தலவகார சாகையைச் சேர்ந்தது. கேன என்று துவங்குவதால் இந்தப் பெயர். கேன என்பதற்கு எதனுல் என்று பொருள்.

நமது மனம் இயங்குகிறதே அது எதனுல்? நாம் மூச்சு விடவும், பேசவும், பார்க்கவும், கேட்கவும் எந்த சக்தி உதவுகிறது? என்ற கேள்வியுடன் ஆரம்பமாகிறது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் தேவர்களுக்கு வெற்றி கிட்டியது. தங்கள் சாமர்த்தியத்தால் தான் வெற்றி கிட்டியதாக நினைத்துத் தேவர்கள் இறுமாப்புற்ருர்கள். அவர்களுக்கு எதிரே ஒரு பூதம் தோன்றி அவர்கள் முன்பு ஒரு துரும்பை வைத்து "இதனிடம் உங்கள் பலத்தைக் காண்பியுங்கள்" என்றது. அக்னி தேவனுல் அதைக் கொளுத்த முடியவில்லை. வாயுதேவனுல் அசைக்கமுடியவில்லை. இந்திரன் முன்வந்தபோது அந்தபூதம் மறைந்தது. ஆகாயத்தில் பர்வத ராஜகுமாரியான உமாதேவி தோன்றி இந்த வெற்றிக்குக் காரணம் நீங்கள் அல்ல. பரம்பொருளான பிரம்ஹமே என்று உபதேசம் செய்கிருர்.

இந்தக் கதை இந்த உபநிடதத்தில் இடம் பெற்றுள்ளது.

3. கட உபநிடதம் :

கிருஷ்ண யஜுர் வேதத்தின் கடசாகையைச் சேர்ந்த இந்த உபநிடதம் நசிகேதஸ் என்ற மாணவனுக்கு யமதர்மன் செய்த உபதேசமாக அமைந்துள்ளது. கீதையில் கிருஷ்ணன் உபதேசம் செய்யும்போது இந்த உபநிடதத்தின் பல வாக்கியங்களைச் சொல்லுகிருர்.

சுவாமி விவேகானந்தர் மேற்கோளாகக் கூறும் "எழுமின்! விழிமின்! ஆன்ருேரை அண்டி அறிவைப் பெறுமின்" என்ற லக்ஷிய வாசகம் இந்த உபநிடதத்தில் தான் உள்ளது.

ஜீவாத்மா என்னும் தேரோட்டிக்குச் சரீரமே தேர் புத்தியே சாரதி. மனமே கடிவாளம். ஐம்பொறிகளே குதிரைகள் என்ற பிரசித்தமான உருவகம் இந்த உபநிடதத்தில்தான் இருக்கிறது.

4. பிரச்ன உபநிடதம் :

இது அதர்வ வேதத்தைச் சேர்ந்தது. பிரச்னம் என்ருல் கேள்வி. ஸுகேசா – பாரத்வாஜர் முதலிய ஆறு சிஷ்யர்கள் – நியமத்துடன் பிரம்ஹசரிய விரதப் இருந்து - பிப்பலாத முனிவரிடம் ஆறு கேள்விகள் கேட்டு அவரது பதிலால் சமாதானம் அடைந்த வரலாறு இந்த உபநிடதம்.

5. முண்டக உபநிடதம் :

இந்த உபநிடதமும் அதர்வ வேதத்தைச் சார்ந்தது. முண்டனம் என்பதற்கு மழித்தல் என்று பொருள். துறவிகள் தங்களது முண்டனம் செய்து கொள்ளப்பட்ட சிரத்தின் மேல் நெருப்புத்தணல் நிறைந்த பாத்திரத்தை வைத்துக் கொண்டு செயயவேண்டியதாக ஒரு விரதம் அதர்வவேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு சிரோவிரதம் என்று பெயர். இந்த விரதத்தை அனுஷ்டித்தவர்களுக்கே இந்த உபநிடதத்தைக் கற்பிக்கவேண்டும் என்ற கட்டளை இந்த உபநிடதத்தின் முடிவில் உள்ளது. ஆதலால் இதற்கு முண்டக உபநிடதம் என்று பெயர்.

" சிலந்திப் பூச்சி பிறகாரணம் எதையும் சார்ந்து நில்லாது தானே தன்னிடமிருந்தே வலையை உண்டாக்குகிறது. அதைத் தானே பாதுகாக்கிறது. விரும்பினுல் அதைத் தன்னுள்ளேயே அடக்கிவிடவும் திறனுள்ளதாக இருக்கிறது. இவ்விதமே ஈச்வரன் தன்னிடமிருந்து உலகத்தைத் தோன்றச் செய்து, காப்பாற்றி, தன்னுள்ளேயே அடக்கவும் செய்கிருர் " என்ற இந்த பிரசித்தமான உவமை இந்த உபநிடதத்திலேதான் உள்ளது.

நமது பாரதக்குடியரசின் லக்ஷிய வாசகமான " ஸத்யமேவ ஜயதே " இந்த உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்டதுதான்.

6. மாண்டுக்ய உபநிடதம் :

பன்னிரண்டு வாக்கியங்கள் கொண்ட இந்தச் சிறிய உபநிடதம் அதர்வ வேதத்தைச் சேர்ந்தது மண்டுகம் என்ருல் தவளை. இந்தப் பெயர் ஏற்பட்டதற்குத் தெளிவான காரணம் தெரியவில்லை.

விழிப்பு, கனவு, ஆழ்ந்த நித்திரை (சுஷுப்தி) என்ற மூன்று நிலைகளில் ஆத்மாவுக்கு முறையே ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் (அஜ்ஞானம்) இவை சரீரங்களாக இருக்கின்றன. அவனுக்கு முறையே விச்வன், தைஜஸன், பிராஜ்ஞன் என்ற பெயர்கள். பிரணவம் எனப்படும் ஓங்காரத்தில் உள்ள அகர-உகர-மகரங்களை முறையே இந்த மூவர்களாக தியானம் செய்யவேண்டும்.

இந்த மூன்று நிலைகளைக் கடந்த - சரீரமெனும் கட்டுப்பாடு இல்லாத - நிலையே துரியநிலை; துரியம் என்றால் நான்காவது என்று பொருள் அந்த நிலையில் ஆத்மா சாந்தம் சிவம் என்று சிறப்பித்துக்கூறப்படுகிறது. பிரிக்கப்படாத பூர்ண ஓங்காரத்தை இந்தப் பரம்பொருளாக தியானம் செய்யவேண்டும் என்கிறது இந்த உபநிடதம்.

இவ்விதம் இந்தச்சிறு தியானத்தால் மோக்ஷமெனும் பெரும் பேற்றை அடையுமாறு - தவளை சுலபமாக தாவுவது போல் - சுலபமாக வழியைச் சொல்லுவதால் இந்த உபநிடதத்துக்கு மாண்டுக்யம் என்று பெயர் வந்தது என்று பெரியோர்கள் கற்பனையாக சொல்லுவார்கள். மண்டுக ரூபியான வருணன் இந்த உபநிடதத்துக்கு ரிஷியாதலால் இந்தப் பெயர் என்றும் சொல்லுவார்கள்.

7. தைத்திரீய உபநிடதம் :

கிருஷ்ண யஜுர் வேதத்தைச் சேர்ந்த தைத்திரிய சாகையில் உள்ள இந்த உபநிடதத்தில் சீக்ஷாவல்லீ ஆனந்தவல்லீ, பிருகுவல்லீ என்று மூன்று பாகங்கள்.

முதல்பாகம் ஆறு அங்கங்களில் ஒன்றான சிக்ஷையின் குறிப்புக்களுடன் துவங்குகிறது. குருகுலத்தில் கல்வி பயின்று முடித்து இல்லம் திரும்பும் மாணவனுக்கு ஆசிரியர் செய்யும் உபதேச உரை (Convocational address) இதில் இடம் பெற்றுள்ளது. உண்மையைப் பேசு! தர்மத்தைச்செய்! தாய், தந்தை, - ஆசிரியர்களைத் தெய்வமெனப் போற்று! படிப்பதை நிறுத்தி விடாதே! என்பன போன்ற உபதேச மொழிகள் பல இங்கே இருக்கின்றன.

புலன்களின் நுகர்ச்சியால் ஏற்படும் சுக அனுபவத்தைக் காட்டிலும் நூற்றுக்கணக்கான மடங்கு பெரியது பிரம்ஹ - ஆனந்தம் என்பதை விளக்குகிறது ஆனந்தவல்லீ.

வருணன் தன் குமாரரான பிருகுமுனிவருக்குச் செய்த உபதேசம்பிருகுவல்லி. உலகத்தைஆக்கல், காத்தல், அழித்தல் என்ற ஈச்வர தத்துவத்தின் இன்றியமையாத இலக்கணம் இங்கே தான் உள்ளது. உணவை வீணடிக்காதே! இகழாதே! நாடிவருவோருக்கும் அளிக்கும்படியாக உணவு உற்பத்தியைப் பெருக்கு! என்பன போன்ற பல உபதேசங்கள் இங்கே உள்ளன.

8. ஐதரேய உபநிடதம் :

ருக்வேதம் ஐதரேய சாகையைச் சேர்ந்தது இந்த உபநிடதம்.

பஞ்சபூதங்களைப் படைத்தபிறகு கடவுள் இந்திரியங்கள் மனம் அடங்கிய சூக்ஷ்ம சரீரத்தையும் அதை இயக்க அக்னி. வாயு போன்ற தேவர்களையும் (தெய்வீக சக்திகளைப்) படைத்தார். பிறகு மாடு, குதிரை இவற்றின்ஸ்தூலசரீரத்தைப்படைத்து அதில் நுழைந்து வசிக்கும்படி அந்த தேவர்களிடம் பணித்தார், தேவர்கள் இடம்போதாது என்றார்கள். மனிதசரீரத்தைக்காட்டியதும்இதுவசதியாகஉள்ளதுஎன்றுகூறிஉள்ளேநுழைந்தார்கள். சரீரம் இயங்க பசியையும் தாகத்தையும் ஏற்படுத்தி ஆகாரத்தையும் கொடுத்தார். பிறகு தானே இவைகளுக்கெல்லாம் உரிமையாளராக உள்ளே நுழைந்தார். சரீரம் இயங்கியது.

இப்படி ஒரு சிருஷ்டி விளக்கம் இந்த உபநிடதத்தில் உள்ளது.

9. (ச்) சாந்தோக்ய உபநிடதம் :

சந்தஸ் என்ற சொல் வேதத்தையும் குறிக்கும் என்று முன்பே சொன்னோம். சந்தோக என்றால் வேதத்தை கானம் செய்பவர்கள் அதாவது ஸாம வேதிகள் என்று பொருள். ஸாமவேதிகளது உபநிடதம் சாந்தோக்ய உபநிடதம். எட்டு அத்யாயங்கள் கொண்டது. இதில் பல தியான முறைகள், அதன் பயனாக சித்திகள், பல கதைகள் கூறப்பட்டுள்ளன.

ஸத்யகாமன் என்ற தந்தையற்ற ஒரு சிறுவன் வேதம் பயில வேண்டி கௌதமர் என்ற முனிவரை அண்டுகிறான். அவர் நீ என்ன கோத்திரம் (எந்த ரிஷியின் வழித்தோன்றல்) என்று கேட்கிறார். அவனுக்குத் தெரியவில்லை. தன் தாயாரிடம்

கேட்கிருன். அவருக்கும் தெரியவில்லை. கோத்திரம் சொல்ல முடியாதது ஒரு களங்கம். இந்த நிலையில் குரு அவனை அங்கீகரிப்பாரா? இருந்தாலும் ஸத்யகாமன் திரும்பி வந்து எனக்குக் கோத்திரம் தெரியவில்லை என்று உண்மையையே சொல்லுகிருன்.

பொய்யாக ஒரு கோத்திரத்தைச் சொல்லாமல் உண்மையை யே சொல்லுவதால் நீ ரிஷியின் வம்சத்தில் வந்தவன் தான் என்பதில் சந்தேகமில்லை என்று கூறி முனிவர் அவனை அங்கீகரித்து வேதம் பயில்விக்கிருர். இது கதைகளில் ஒன்று.

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத "ஸத்" எனப்படும் பரம்பொருள் ஸ்தூலரூபம ஏற்று நாம் காணும் பொருள் அத்தனையுமாகக் காட்சியளிக்கிறது என்ற தத்துவத்தைப் பல செயல்முறை விளக்கங்களுடன் தெளிவாக்குகிறது இந்த உபநிடதம்.

10. பிருஹதாரண்யக உபநிடதம் :

சுக்ல யஜுர் வேதத்தில் காண்வசாகையைச் சேர்ந்த இந்த ஆரண்யகம் உபநிடதமாகவும் இருக்கிறது. பிருஹத் என்ருல் பெரியது. கருத்திலும், உருவத்திலும் பெரிய உபநிடதம். ஆறு அத்யாயங்கள் கொண்டது.

அஜாத சத்துரு, ஜனகர் போன்ற அரசர்கள் தத்துவ ஞானிகளாக இருந்த வரலாறும் கார்கி என்ற பெண்மணி முனிவர்களுக்குச் சமமாக தத்துவ விமரிசனம் செய்பவளாக இருந்த வரலாறும் இந்த உபநிடதத்தில் காணக்கிடக்கிறது.

துறவறம் ஏற்க விரும்பிய கணவர் யாஜ்ஞவல்க்யரிடம் அவருடைய சொத்தை ஏற்க மறுத்து மைத்ரேயி தத்துவ உபதேசத்தையே அடைய விரும்புகிருள். அன்பு பாராட்டும் உணர்வில் உள்ள ஆனந்த அனுபவத்தைப் பல உதாரணங் களுடன் விளக்குகிறது இந்த உபதேசம்.

தேவர்கள், மனிதர்கள், அசுரர்கள் மூவரும் பிரஜாபதியிடம் உபதேசம் வேண்டிச் செல்லுகின்ருர்கள். அவர் "த" என்ற ஒரு எழுத்தை மாத்திரம் உபதேசிக்கிருர்.

தேவர்கள் உல்லாசவாழ்க்கையில் ஈடுபட்டவர்களாதலால் "தாம்யத" இந்திரியங்களை அடக்குங்கள் என்று உபதேசம் செய்ததாகக் கொள்கிருர்கள்.

மனிதர்கள் சுயநலமும், உலோபமும் உள்ளவர்களாதலால் "தத்த" கொடுங்கள், தானம் செய்யுங்கள் என்று சொன்னதாக நினைக்கிறார்கள்.

அசுரர்கள் குரூரசுபாவமுள்ளவர்களாதலால் "தயத்வம்" தயையுடன் இருங்கள் என்று கூறியதாக எண்ணுகிறார்கள்.

பிரம்ஹ சூத்திரம் :

உபநிடதங்களின் கருத்தை ஆராயும் முறையில் வியாஸர் பிரம்ஹ சூத்திரம் (சாரீரக மீமாம்ஸா) என்ற ஆராய்ச்சிநூலை இயற்றியிருக்கிறார். வேதத்தை பிரமாணமாகக் கொண்ட மதாசாரியர்கள் பலர் இந்தநூலுக்கு பாஷியம் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ கண்டாசாரியர் எழுதிய பாஷியம்சைவசித்தாந்தத்திற்கு இசைவானது. இந்த பாஷியத்திற்கு அப்பய்ய தீக்ஷிதர் எழுதிய சிவார்க்கமணி தீபிகை என்ற உரையும் உளது.

வினாக்கள்

1. உபநிடதம் என்ற சொல்லிற்குப் பொருள் என்ன ?
2. சங்கரர், இராமாநுஜர், மத்வர் ஆகிய ஆச்சாரியர்கள் உரை எழுதிய பத்து உபநிடதங்கள் யாவை ?
3. ஈசாவஸ்ய உபநிடதத்திற்குப் பெயர்க்காரணம் என்ன ?
4. பாரதத்தின் லக்ஷிய வாசகமான "ஸத்யமேவ ஜயதே" எந்த உபநிடதத்தில் வருகிறது ?
5. மாண்டூக்ய உபநிடதம் விளக்கும் பொருள் என்ன ?
6. குறிப்பு எழுதுக :—

   சிரோவிரதம், பிருகுவல்லீ, பிரம்ம சூத்திரம்.

கட்டுரை வழங்கியவர் : "வித்யாவாசஸ்பதி"

திரு. P. ராமதாஸ் ஐயர்,

ஆனந்ததாண்டவபுரம்.